பக்கங்கள்: பன்னிரண்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 7.00

சுடர்17 வள்ளுவர் ஆண்டு 2033 ஆனி 10 திங்கட்கிழமை (24-06-2002) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:211

## ஜே.வி.பியின் போக்கை கண்டித்து நாளை நகரில் மறியல் போராட்டம்!

### ஐக்கிய சோஷலிசக் கட்சி ஏற்பாடு

யாழ்ப்பாணம்,ஜூன்24

ஜே.வி.பியின் சமாதான விரோதப் போக்கைக் கண்டித்து நாளை யாழ்நகரில் மறியற் போராட்டம் ஒன்று நடத்தப்படவுள்ளது.

ஐக்கிய சோஷலிசக்கட்சியின் ஏற்பாட்டில் இந்தப் போராட்டம் நாளை நண்பகல் 12.30 மணிக்கு யாழ்.பஸ் நிலையப்பகுதியில் நடைபெறும்.

சமாதான முயற்சிகளுக்கு எதிராக ஜே.வி.பி. மேற்கொண்டுவரும் பிரசாரங்கள், பேரணிகள் என்பவற்றைக் கண்டித்தும் -

ஜே.வி.பியின் இன்றைய அரசியல் நிலைப்பாட்டை சிங்கள மக்கள் புறக்கணிக்க வேண்டும் எனக் கோரியும் -

(12ஆம் பக்கம் பார்க்க)

## 2 முறைப்பாடுகளை விசாரிக்க புருகோவிட் திருமலை விஜயம்

கொழும்பு,ஜூன்24

போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவர் ஜெனரல் ரொன்ட் புருகோவிட் அடுத்தவாரம் திருகோணமலைக்குச் செல்லவுள்ளார்.

இரண்டு முக்கிய முறைப்பாடுகளை விசாரணை செய்வதற்காகவே அவர் திருகோணமலைக்குச் செல்லவுள்ளதாக யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

திரியாய்ப் பகுதி மக்கள் மீளக் குடியமர்வதற்கு கடற்படையினர் அனுமதி மறுத்துள்ளமை தொடர்பாகவும் -

விடுதலைப் புலிகளின் மூதூர் அலுவலகம் தாக்கப்பட்டமை தொடர்பாகவும் - கிடைத்துள்ள முறைப்பாடுகளை விசாரணை செய்வதற்காகவே "அவர் திருகோணமலைக்குச் செல்லவுள்ளதாகக் கூறப்படுகிறது. (ஐ-6-9)

# தலைவராக ஆனந்த சங்கரி தெரிவு;

# துரைரத்தினசிங்கம்தான் புதிய எம்.பி.

## கூட்டணியின் கூட்டத்தில் காட்டமான வாக்குவாதம்

கொழும்பு,ஜூன்24

**அமரர் சிவசிதம்பரத்தின் மறைவை அடுத்து வெற்றிடமாகியிருந்த தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் பதவிக்கு சிரேஷ்ட துணைத் தலைவர் வீ.ஆனந்தசங்கரி தெரிவுசெய்யப்பட்டிருக்கிறார். துணைத் தலைவர் பதவியை மட்டக்களப்பு மாவட்ட எம்.பி.ஜோசப் பரராஜசிங்கம் ஏற்றுள்ளார்.**

**வெற்றிடமாக உள்ள தேசியப் பட்டியல் எம்.பி பதவிக்கு துரைரத்தினசிங்கத்தின் பெயரை செயற்குழு சிபாரசு செய்துள்ளது. அவருடைய நியமனத்தை முறைப்படி கூட்டணியின் நியமனக் குழு அறிவிக்கும்.**

தலைவராக வீ.ஆனந்தசங்கரியும், சிரேஷ்ட துணைத் தலைவராக ஜோசப் பரராஜசிங்கமும், ஜோசப் பரராஜசிங்கம் வகித்துவந்த இணை தனாதிகாரி பதவியை செயற்குழு உறுப்பினர் எஸ்.தியாகராஜாவும் (எஸ்.டி.ஆர்) தெரிவு செய்யப்பட்டதாக கூட்டணியின் செயலாளர் நாயகம் இரா.சம்பந்தன் உத்தியோகபூர்வமாக அறிவித்தார். ஆனால்,

(12ஆம் பக்கம் பார்க்க)

## தீவகப் பகுதிக்கென தனியான கண்காணிப்புக் குழு பிரதிநிதி

### அரசுத்தரப்பு கோரிக்கை

கொழும்பு,ஜூன்24

தீவகப் பகுதியில் போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு அதிகாரி ஒருவரை நிரந்தரமாக நியமித்து அவர் மூலம் அங்கு கண்காணிப்புப் பணியை மேற்கொள்ளவேண்டும்.

இலங்கைக் கண்காணிப்புக் குழுவிடம் அரசு இவ்வாறு கேட்டிருப்பதாக பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்னாண்டோ தெரிவித்திருக்கிறார்.

வேலணையில் இடம்பெற்ற போர் நிறுத்த மீறல் சம்பவம் தொடர்பாக பி.பி.ஸிக்குப் பேட்டியளித்தபோது ஒஸ்ரின் பெர்னாண்டோ மேலும் தெரிவித்ததாவது:-

இப்படியான சம்பவங்களில் இனிமேல் தொடர்புபட வேண்டாம் என்றும் - அங்கு என்ன நடக்கிறது என்பதில் மிகவும் சகிப்புத்தன்மையுடன் இருக்கவேண்டும் எனவும் எமது கடற்படையினருக்கு நாம் கூறியுள்ளோம். அவர்கள் அதைக் கேட்டு நடப்பார்கள் என்று நம்புகிறோம்.

இந்தத் தாக்குதல் சம்பவம் தொடர்பாக விசாரணை ஒன்றை நடத்தவுள்ளோம். இதில் எவர்மீதாவது தவறு இருப்பது அறியப்பட்டால் அவர்கள் அதன் பலனை அனுபவிக்கவேண்டும். ஏனையோருக்கு இது ஓர் எச்சரிக்கையாக இருக்கும். நாம் இதில் மிகவும் உறுதியாக உள்ளோம். தப்புச்செய்த எவராவது தண்டனை அனுபவிக்காமல் போய்விடமாட்டார்கள்.

புலிகளின் தரப்பில் சில போராளிகளிடம் தவறுகள் இருந்தால் புலிகளும் அவ்வாறே செய்வார்கள் என்று நான் நம்புகிறேன். இது தொடர்பாக பக்கசார்பற்ற அனுசரணையை உயர் மட்டக்குழு ஒன்று மேற்கொள்வதற்கும் நாம் இணங்கியுள்ளோம். இச்சம்பவம் தொடர்பாக கண்காணிப்புக் குழுவுடன் நாம் கலந்துரையாடுவோம். சில சமயம் இந்த விசாரணைக் குழுவில் அங்கம் வகிப்போர் தொடர்பாக புலிகளுடன்கூட பேசி ஆள்களை

(12ஆம் பக்கம் பார்க்க)

## அம்பாறை கண்காணிப்பு குழு கலையும் ஆபத்தான நிலை!

### புலிகளின் பிரதிநிதிகள் கூட்டங்களைப் பகிஷ்கரிக்கிறார்கள்

காரைதீவு,ஜூன்24

அம்பாறை மாவட்ட யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழு கலையும் ஆபத்தான நிலையில் இருக்கிறது. காரணம் குழுக் கூட்டங்களை தமிழீழ விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகள் இருவரும் பகிஷ்கரிக்க இருக்கிறார்கள். ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் கூட்டம் நடைபெறுகிறது. அதன்படி நாளையும் கூட்ட நாள். ஆனால், புலிகளின் பிரதிநிதிகள் கூட்டத்துக்குச் செல்வதில்லை என்று முடிவு செய்திருக்கிறார்கள்.

குழுவில் உள்ள அரசாங்கப் பிரதிநிதிகள் இருவருக்கும் தலா ரூபா 30,000 மாதச் சம்பளமாக வழங்கப்படுகிறது. லீவு, தொலைபேசி, [illegible] வசதிகள் எல்லாம் அவர்களுக்கு உண்டு. புலிகளின் பிரதிநிதிகளுக்கு இவை எதுவும் இல்லை. அரசாங்கப் பிரதிநிதிகளைப் போல கொடுப்பனவுகளில் சமமாக நடத்தப்படும் வரை குழுக் கூட்டங்களில் கலந்துகொள்வதில்லை என்று புலிகளின் பிரதிநிதிகள் முடிவு செய்திருக்கின்றனர்.

கண்காணிப்புக்குழுக் கூட்டம் நடைபெறுவதற்கு அரசு மற்றும் புலிகள் தரப்புகளிலிருந்து ஒவ்வொருவராவது சமுகமளிக்க வேண்டும். அப்படி இல்லாவிட்டால் கூட்டத்தை நடத்த முடியாது. எனவேதான் கூட்டம் நடத்த முடியாதநிலையில் அம்பாறை மாவட்ட யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழு இயல்பாகவே கலைந்துவிடும் என்று அஞ்சப்படுகிறது.

**தலைவர் லீவில்**

அம்பாறை மாவட்ட யுத்தநிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் தலைவரான ஏர்க்கி பிளட்டன் 3 வாரகால

(12ஆம் பக்கம் பார்க்க)

### எதிரணி எம்.பிக்கள் 41 பேர் அரசுக்கு ஆதரவு

கொழும்பு,ஜூன்24

ஜனாதிபதியின் அதிகாரங்களைக் குறைப்பதற்கு பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் 41 நாடாளுமன்ற உறுப்பினர்கள் அரசுக்கு ஆதரவு வழங்கவுள்ளதாக கூறப்படுகிறது.

இவ்வாறு ஆதரவு வழங்கவுள்ளவர்களின் பெயர் விவரங்கள் தமக்குத தெரியும் என்று பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் கம்பஹா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே தெரிவித்தார்.

எனினும் நாகரிகம் கருதி அவர்களின் பெயர்களை வெளியிடமாட்டேன் என்றும் அவர் கூறியுள்ளார்.




## 4,000 பேர் அடங்கிய சமாதான யாத்திரை

### நேற்று நயினாதீவு வந்தடைந்தது

யாழ்ப்பாணம்,ஜூன்24

தென்பகுதியிலிருந்து புறப்பட்ட சமாதானப் பேரணி நேற்று நண்பகல் நயினை நாகபூஷணி அம்மன் ஆலயத்தை வந்தடைந்தது.

நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சித அலுவிகார தலைமையில் வருகை தந்த இந்த சமாதான யாத்திரைக் குழுவில் சுமார் 4 ஆயிரத்துக்கும் அதிகமான பொதுமக்கள் கலந்துகொண்டனர். மோட்டார் சைக்கிள்கள் உட்பட 920 வாகனங்கள் இடம்பெற்றிருந்தன.

மாத்தளை முத்துமாரி அம்மன் ஆலயத்திலிருந்து புறப்பட்ட இந்த

(12ஆம் பக்கம் பார்க்க)

### குற்றச் செயல்களைத் தடுக்க

## தப்பியோடிய படையினரின் விவரங்கள் சேகரிப்பு

இலங்கை இராணுவத்தில் இருந்து தப்பியோடிய 35ஆயிரம் பேர் தொடர்ந்தும் தலைமறைவாகவே வாழ்ந்து வருகின்றனர் என்று கூறப்படுகிறது. இதனால் இவர்களின் விவரங்களை திரட்டுமாறு உள்துறை அமைச்சு பொலீஸாருக்கு உத்தரவிட்டுள்ளது.

நாட்டில் இடம்பெறும் குற்றச்செயல்களில் பெரும்பாலானவற்றில் தப்பியோடிய படையினர் சம்பந்தப்பட்டிருப்பதாக பொலீஸார் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இந்நிலையில் நாட்டில் நடைபெறும் குற்றச்செயல்களை தடுக்க உள்துறை அமைச்சு விசேட திட்டங்களை தீட்டி வருகிறது.

இதன் அடிப்படையிலேயே படையில் இருந்து தப்பியோடியவர்களின் விவரங்களை சேகரிக்க திட்டமிடப்பட்டதாகக் கூறப்படுகிறது. (ஐ-6-9)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# யாழ்.மாணவர்கள் 2,000 பேருக்கு சமாதானக் குடைகள், தொப்பிகள்

யாழ்ப்பாணம்,ஜூன்.24

கொழும்பு ஜயவர்த்தனபுர லயன்ஸ் கழகத்தினால் யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த சுமார் இரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட மாணவர்களுக்கு நேற்று சமாதானக் குடைகளும், தொப்பிகளும் அன்பளிப்பாக வழங்கப்பட்டன.

யாழ்.துரையப்பா ஸ்ரேடியடித்தில் நடைபெற்ற இந்நிகழ்வில் குடைகளை வழங்கவென 40 லயன்ஸ் கழக உறுப்பினர்கள் வருகை தந்திருந்தனர்.

சுமார் இரண்டாயிரத்துக்கும் மேற்பட்ட மாணவர்களும் ஆசிரியர்களும் கலந்துகொண்ட இந்நிகழ்வில் வைத்து சமாதான சுலோகங்கள் அடங்கிய துண்டுப்பிரசுரங்கள் விநியோகிக்கப்பட்டன. சமாதானத்திற்கான கீதமும் இசைக்கப்பட்டது. (ஐ-ரி)







கோட்டே ஸ்ரீ ஜயவர்த்தனபுர லயன்ஸ் கழகத்தினரால் ஒழுங்கு செய்யப்பட்ட பாடசாலை மாணவர்களுக்கு சமாதான குடை, தொப்பி வழங்கும் செயல்திட்ட நிகழ்வு நேற்று யாழ்.துரையப்பா ஸ்ரேடியத்தில் நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படங்களை மேலே காணலாம்.

## பொலீஸார் விவரம் பதிவு

சுன்னாகம்,ஜூன்24

நுணாவில் சந்தியில் அமைக்கப்பட்டுள்ள சாவகச்சேரி பொலீஸ் நிலையத்தைச் சேர்ந்த பொலீஸார் அப்பகுதியில் தங்கியுள்ள குடியிருப்பாளர்கள் தொடர்பான விவரங்களைப் பதிவுசெய்து வருகின்றனர்.

குடும்ப உறுப்பினர்களின் பெயர், தொழில் முதலியவற்றை பொலீஸார் பதிவு செய்கின்றனர். (ஐ-27)

## நயினை உற்சவத்துக்கு சென்றவர்கள் விபத்தில் சிக்கினர்!

யாழ்ப்பாணம்,ஜூன்24

நயினாதீவு நாகபூஷணி அம்மன் ஆலய தேர்த் திருவிழாவிற்கு மோட்டார் சைக்கிளில் சென்றவர்கள், வானுடன் மோதி விபத்துக்குள்ளானதில் ஒருவர் படுகாயமடைந்தார்.

மண்கும்பான் சந்திக்கு அண்மையில் இடம்பெற்ற இந்த விபத்தில் மல்லாகம் மாவட்ட நீதிமன்றில் பணிபுரியும், தாவடியைச் சேர்ந்த சோ. நகுலேஸ்வரி (வயது 53) என்பவரே படுகாயமடைந்தவராவார். அவரது கணவனான ஆனைப்பந்தி அமெரிக்க மிஷன் வித்தியாலய அதிபர் எஸ். சோமேஸ்வரபிள்ளையும் காயமடைந்துள்ளார். இருவரும் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (ஐ-ரி-9-15)

## காத்தான்குடியில் பறக்கும் தட்டுகள்!

காத்தான்குடி,ஜூன்24

காத்தான்குடியின் சில பிரதேசங்களில் பறக்கும் தட்டுகள் அவதானிக்கப்பட்டன என்று கூறப்படுகிறது. சுமார் இரண்டரை அடி உயரமுள்ள குள்ள மனிதர்கள் அவற்றில் காணப்பட்டனராம்.

சில தினங்களுக்கு முன்னர் இரவு 8 மணியளவில் சுமார் 200 அடி உயரத்தில் வித்தியசமான ஒளிப்பிளம்பு ஒன்று பயணம் செய்ததைத் தான் கண்டதாக காத்தான்குடி முதலாம் குறிச்சியைச் சேர்ந்த எம்.ஹனீபா என்ற மீனவர் கூறுகிறார். மஞ்சந்தொடுவாயைச் சேர்ந்த எஸ்.சுபைதீன் என்பவர், அன்றைய தினம் தனது தாயாரும் இவ்வாறான ஒரு புதுமையை அவதானித்திருக்கிறார் என்று கூறினார். (ஐ)

## ஆரையம்பதி முகாம் மண்முனைக்கு மாற்றம்

காத்தான்குடி,ஜூன்24

காத்தான்குடி பொலீஸ் பிரிவிற்குட்பட்ட ஆரையம்பதியில் ஆலயங்களுக்கு அருகில் அமைந்திருந்த விஷேட அதிரடிப்படை முகாம் வெள்ளிமுதல் அகற்றப்பட்டுள்ளது. இம்முகாமிலிருந்த விசேட அதிரடிப்படையினர் மண்முனை முகாமிற்கு இடமாற்றப்பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை, பிரதான வீதியை அண்டியிருந்த பொலீஸ் காவலரண்கள், படைமுகாம்கள் அகற்றப்பட்டு வருவதால் சிரமமின்றி வாகனப் போக்குவரத்து இடம்பெற்று வருகின்றது. (ஐ)

## அருணகிரிநாதர் விழா

யாழ்ப்பாணம்,ஜூன்24

புதிய விஞ்ஞான கல்வி நிலையத்தின் அனுசரணையுடன் அருணகிரிநாதர் விழா இன்று சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இவ்விழாவில் 'அருணகிரிநாதரும் அனுபூதியும்' என்ற பொருளில் செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுகனும் - 'பாடும் பணியாய் அருளாய்' என்ற தலைப்பில் ஆசிரியர் ச.லலீசனும் சொற்பொழிவாற்றவுள்ளனர். அத்துடன் இசையரங்கு மற்றும் குரலிசை போன்ற நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன. (ஐ-9)

ஜப்பான் தென்கொரியா
உலகக் கிண்ண கால்பந்து
2002 FIFA WORLD CUP KOREA JAPAN
31.05.2002 - 30.06.2002



# அரை இறுதியில் ரொனால்டோ ஆடுவார்

சியோல்,ஜூன்24

பிரேஸில் நட்சத்திரம் ரொனால்டோ நாளைமறுதினம் நடைபெறவுள்ள அரையிறுதி ஆட்டத்தில் விளையாடுவதற்கான உடற்தகுதியுடன் உள்ளார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த வெள்ளியன்று இங்கிலாந்துடன் இடம்பெற்ற கால்இறுதி ஆட்டத்தின்போது காலில் காயமடைந்தார் ரொனால்டோ. அவரது தொடைப் பகுதியில் பலமான காயம் ஏற்பட்டுள்ளதால் அவர் துருக்கியுடனான அரையிறுதி ஆட்டத்தில் விளையாடமாட்டார் என்று முன்னர் அறிவிக்கப்பட்டது.

அவரது காயம் மிகப் பெரியது அல்ல. எனினும் அது குணமடைவதற்கு சில நாள்கள் செல்லும். அரையிறுதி ஆட்டத்துக்கு முன்னர் காயம் குணமடையுமா என்பது சந்தேகத்துக்குரியது என்று பிரேஸில் அணியின் மருத்துவர் தெரிவித்திருந்தார்.

எனினும் அரையிறுதி ஆட்டத்தில விளையாடுவதற்கான உடற்தகுதியுடன் ரொனால்டோ இருப்பதாக நேற்றுமாலை அறிவிக்கப்பட்டது. தகுந்த சிகிச்சையின் பின்னர் ரொனால்டோவின் காயம் ஆறியுள்ளது. அரையிறுதி ஆட்டம் நடைபெறும நாளைமறுதினத்துக்கு முன்னர் அவர் முழு உடற்தகுதியைப் பெற்றுவிடுவார். அந்த ஆட்டத்தில் முழு உடற்தகுதியுடன் அவர் ஆடுவார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

"ரொனால்டோவுக்கு அளிக்கப்பட்ட சிகிச்சைக்கு தகுந்த பயன் கிடைத்துள்ளது" - என்று தெரிவித்தார் பிரேஸில் அணி மருத்துவர் ஜோஸ் லூயிஸ் ரன்கோ.

"அனைத்தும் நன்றாகவே சென்று கொண்டிருக்கின்றன. அவர் திங்கட்கிழமையன்று தனது வழமையான பயிற்சிகளுக்குத் திரும்பிவிடுவார்" - என்றும் அவர் சொன்னார்.

ரொனால்டோவுக்கு ஏற்பட்ட காயம் மிகப்பெரியது இல்லை எனினும், அவர் இதற்கு முன்னர் சுமார் இரண்டு வருடங்களாகத் தனது கால்களில் ஏற்பட்ட காயத்துக்கு சிகிச்சை பெற்றிருந்தமையினால் அது குறித்து அதிக கவனம் செலுத்த வேண்டியேற்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை-

பிரேஸில் முன்கள வீரரான ரொனால்டினோ அரையிறுதி ஆட்டத்தில் ஆடமாட்டார். ஆனால் பிரேஸில் இறுதி ஆட்டத்துக்குத் தகுதி பெற்றால் அதில் ஆடுவார்.

இங்கிலாந்துடனான கால்இறுதி ஆட்டத்தின்போது அந்த அணி வீரர் டானி மில்ஸுடன் ஏற்பட்ட பலப்பரீட்சையில் முறைகேடாக ஆடினார் என்பதற்காக ரொனால்டினோ சிவப்பு அட்டை காடடப்பட்டு வெளியேற்றப்பட்டார்.

சிவப்பு அட்டை காட்டப்பட்டு வெளியேற்றப்பட்டவர்கள் ஓர் ஆட்டத்தில் விளையாட முடியாது என்பது பொதுவான விதி. ஆனால், ரொனால்டினோ அதற்கு மேலதிகமாக மேலும் ஒரு போட்டியில் ஆடக்கூடாது என்று FIFA ஒழுங்குக் கட்டுப்பாட்டுச்சபை தடைவிதித்திருந்தது.

ஆனால், இது தொடர்பாக நேற்று நடைபெற்ற விசாரணைகளின் பின்னர் ரொனால்டினோவுக்கு வழங்கப்பட்ட தண்டனை குறைக்கப்பட்டு, புதன்கிழமை நடைபெறும் அரையிறுதி ஆட்டத்தில் பிரேஸில் வெற்றிபெற்றால் அடுத்து வரும் இறுதி ஆட்டத்தில் அவர் ஆடுவதற்குத் தற்போது அனுமதியளிக்கப்பட்டுள்ளது.

இங்கிலாந்துடனான கால்இறுதி ஆட்டத்தில் கோல்கம்பங்களிலிருந்து 42யார் தூரத்தில் வைத்து ரொனால்டினோ அடித்த கட்டுப்பாடற்ற உதை (Free kick) மூலம் கிடைத்த கோலே அணிக்கு வெற்றியைத் தேடித்தந்தமை குறிப்பிடத்தக்கது. (ம)



இங்கிலாந்துடனான ஆட்டத்தில் ரொனால்டினோ வெளியேற்றப்படும் காட்சி.

# சுன்னாகம் மின்நிலையத்துக்கு இரு பாரிய மின்மாற்றிகள்

## பொருத்தும் வேலைகள் ஆரம்பம்

சுன்னாகம்,ஜூன்24

சுன்னாகம் மின் உற்பத்தி நிலையத்திற்கு இரண்டு பாரிய மின்மாற்றிகள் (Transformer) கொள்கலன் மூலம் எடுத்துவரப்பட்டுள்ளன. அவற்றைப் பொருத்தும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை -

தரைவழியாக எடுத்து வரப்பட்ட பாரிய மின்பிறப்பாக்கிகள் பதினெட்டும் 40 அடி நீளமான தரைத் தளங்களில் பொருத்தப்பட்டுள்ளன. இவற்றைப் பரீட்சித்துப் பார்க்கும் பணி தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மின்பிறப்பாக்கிகளின் முன்பாகப் பலமான 'கொங்கிறீட்' அமைக்கப்பட்ட மின்கம்பங்கள் நாட்டப்பட்டு, அவற்றின் மூலமாக மின் இணைப்பு வழங்குவதற்கான பூர்வாங்க வேலைகளும் நடைபெற்று வருகின்றன. இம்மாத இறுதிக்குள் இம்மின் உற்பத்தி நிலையம் செயற்படத் தொடங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இரவு பகலாக பெரும் எண்ணிக்கையான தொழிலாளர்கள் பணியாற்றி வருகின்றனர். இவர்களுக்கான தங்குமிட வசதிகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. (ஐ-27)

# மோட்டார் சைக்கிள்களும் நடைபாதையில் விற்பனை

## சுன்னாகத்தில் சூடு பிடிக்கிறது

சுன்னாகம்,ஜூன்24

கொழும்பிலிருந்து கொண்டு வரப்பட்ட பெரும் எண்ணிக்கையான மோட்டார் சைக்கிள்கள் சுன்னாகத்தில் விற்பனை செய்யப்படுகின்றன.

சுன்னாகம் சந்தைக்கு முன்பாக நண்பகலுக்குப் பின்னர் நிரையாகக் காட்சிப்படுத்தப்பட்டிருக்கும் இம்மோட்டார் சைக்கிள்களை வாங்குவதற்காகவும், பார்வையிடுவதற்காகவும் பெருமளவினோர் அங்கு கூடுவதையும் காணமுடிகிறது.

பல்வேறு விலைகளிலும், தரத்திலும் காணப்படும் இம்மோட்டார் சைக்கிள்கள் சட்டபூர்வமான முகவர்களால் எடுத்துவரப்பட்டவையா என்பது தெரியவில்லை என்றும் -

எனவே அவற்றைக் கொள்வனவு செய்வோர் அவதானமாக இருக்க வேண்டும் எனவும் -

பொலீஸார் அறிவுறுத்தியுள்ளனர். (ஐ-27)

# ஆசியாவுக்கு பெருமை சேர்க்குமா தென்கொரிய அணி?



மகிழ்ச்சியில் பிரேஸில் அழகி

ஆவலுடன் எதிர்பார்க்கப்பட்ட உலகக் கிண்ண உதைப்பந்தாட்டம் முடிவுறும் கட்டத்தை அடைந்துவிட்டது. நாளை செவ்வாய்க்கிழமை அரையிறுதி ஆட்டங்கள் ஆரம்பமாகின்றன. எதிர்பார்த்ததைவிட அதிர்ச்சிகரமான முடிவுகளுடன் இரண்டாம் சுற்றும் கால் இறுதி ஆட்டங்களும் நிறைவு பெற்றுள்ளன.

ஆசிய உதைப்பந்தாட்ட வரலாற்றில் தென்கொரிய அணி ஒரு வரலாற்றுச் சாதனை படைத்து அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது. இவ்வளவுக்கும் மேற்குலக உதைபந்தாட்ட நிபுணர்களால் முதல் சுற்றிலேயே வெளியேறிவிடும் அணி என்று எள்ளிநகையாடப்பட்ட அணி தென்கொரியா. ஆனால் இன்று மேற்குலக அணிகள் பலவற்றின் உலகக் கிண்ணக் கனவை தவிடுபொடியாக்கி ஏனைய அணிகளையும் அச்சுறுத்தி நிற்கின்றது அது. இதற்கு தென்கொரிய வீரர்கள் மட்டுமல்ல அந்த நாட்டு மக்களனைவருமே காரணம்.

தமது அணி இத்தாலியுடனான போட்டியில் வெற்றிபெற்று இரண்டாம் சுற்றுக்குத் தகுதி பெற்றது




கால்இறுதி ஆட்டத்தில் ஸ்பெயினை தென்கொரியா வென்ற மகிழ்ச்சியில் ஸ்பெயினுக்கு விடை கொடுக்கும் தென்கொரிய ரசிகர்.

என்பதைக் கேள்விப்பட்டவுடன் 47 லட்சம் மக்கள் வீதியில் இறங்கித் தமது மகிழ்ச்சியை வெளிப்படுத்தினார்கள். தலைநகர் சியோலில் மட்டும் 17 லட்சத்து 60 ஆயிரம் மக்கள் வீதிக்கு வந்து வெற்றி பெற்ற தமது அணிக்கு மகிழ்ச்சியையும் வாழ்த்துக்களையும் தெரிவித்தார்கள். தென்கொரிய அணி தொடர்ந்து வெற்றி




தென்கொரியாவில் வாணவேடிக்கை

களைக் குவித்து சாதனை படைப்பதற்கு அந்த மக்களின் இத்தகைய ஆத்மார்த்த பலம் - உதைபந்தாட்டம் மீது அவர்கள் கொண்டுள்ள வெறி - ஒரு மிக முக்கிய காரணமாகும்.

கொரியர்களின் இந்த வெற்றி மேற்குலகத்தவர்களின் ஆதிக்க மனப்பான்மையையும் சகிப்புத் தன்மையற்ற போக்கையும் விளையாட்டில் வெற்றி தோல்வியைச் சமமாக மதிக்காத தன்மையையும்கூட வெளியுலகத்துக்குக் கொண்டுவந்துள்ளது.

இரண்டாம் சுற்று 'நொக் அவுட்' முறையில் இடம்பெற்றது. இதில் இம்முறை உலகக் கிண்ணத்தை வெல்லும் அணிகளுள் ஒன்று என்று முன்னர் கணிக்கப்பட்ட இத்தாலி அணியை எதிர்த்து தென் கொரியர் ஆடியது. ஆட்டநேரத்தில் இரு அணிகளும் தலா ஒரு கோல் அடித்துச் சமநிலையில் இருந்தன. இதனால் மேலதிக நேரம் வழங்கப்பட்டது. இந்த நேரத்தில் தென்கொரிய வீரர் ஆன் ஜுங் ஹுவான் பொன் கோல் (Golden Goal) அடித்து அணியை வெற்றி பெறச் செய்தார்.



ஜப்பானின் தோல்வியை தாங்க முடியாத ரசிகர்கள் ஓடிச் சென்று ஆற்றில் குதிக்கும் காட்சி.

இவர் இத்தாலியின் முதல்தர உதைப்பந்தாட்டக் கழகமொன்றில் ஒப்பந்த அடிப்படையில் விளையாடி வருபவர். இவர் அடித்த கோல் மூலம் இத்தாலி அணி தோற்று போட்டித் தொடரிலிருந்து வெளியேறியதை சகித்துக்கொள்ளாத அந்தக் கழகம் உடனடியாக வீரர் ஆன் ஜுங் ஹுவானுடைய ஒப்பந்தத்தை ரத்துச் செய்வதாக அறிவித்துள்ளது. "எமது அணியில் ஆடிவிட்டு இத்தாலி அணியைத் தோல்வியுறச் செய்த அவரை தொடர்ந்து எமது கழகத்தில் வைத்திருக்க நான் விரும்பவில்லை" - என்றார் கழகத்தின் உரிமையாளர். அத்துடன் இத்தாலி - தென்கொரியா இடையிலான ஆட்டத்தில் நடுவர்கள் இத்தாலிய அணிக்குப் பாதிப்பான விதத்தில் நடந்துகொண்டார்கள் என்றும் அந்த அணியினர் குற்றஞ் சாட்டியுள்ளனர்.

இத்தகைய ஒரு நிலை செனகல் - பிரான்ஸ் அணிகளுக்கும் ஏற்பட்டுள்ளது. செனகல் அணியில் ஆடும் இரு வீரர்கள் தவிர்ந்த ஏனையோர் பிரான்ஸ் கழகங்களுக்காக ஒப்பந்த அடிப்படையில் ஆடுபவர்கள். இவர்களது அபாரமான ஆட்டத்தால் போட்டித் தொடரில் முதலாவது ஆட்டத்திலேயே பிரான்ஸ் தோல்வியடைந்தது. அத்துடன் செனகல் அணி காலிறுதிக்கு முன்னேற பிரான்ஸ் முதல் சுற்றுடனேயே வெளியேறியது.

பொதுவாக ஆசிய மற்றும் ஆபிரிக்க நாடுகளில் புகழ் பெற்ற வீரர்கள் பணத்துக்காகவும் சிறப்பான ஆட்ட நுணுக்கங்களைக் கற்றுக் கொள்வதற்காகவும் ஐரோப்பிய கழகங்களுக்காக ஆடுவது வழமை. ஆனால் இந்த உலகக் கிண்ணத் தொடரின் பின்னர் இந்த நிலைமை தொடருமா என்பது கேள்விக்குறியே.

தமது நாட்டுக் கழகங்களில் ஆடி ஆட்ட நுணுக்கங்களைக் கற்றுக் கொண்டு உலகக் கிண்ணப் போட்டியின்போது தமது நாட்டு அணிகளையே தோற்கடிக்கிறார்கள் இந்த ஆசிய மற்றும் ஆபிரிக்க வீரர்கள் என்ற குற்றச்சாட்டு தற்போது மேற்குலக நாடுகளில் ஏற்பட்டுள்ளது.

உதைபந்தாட்டம் தமது சொத்து என்றிருந்த மேற்குலக மற்றும் தென் அமெரிக்க நாடுகள் தற்போது ஆசிய மற்றும் ஆபிரிக்க உதைபந்தாட்ட அணிகளுக்கும் அஞ்ச ஆரம்பித்துவிட்டன என்பதனை[illegible]காட்டுகின்றது.

கால் இறுதி ஆட்டங்களில் நுழைந்த ஆபிரிக்க, ஆசிய அணிகளில் ஆபிரிக்க அணியான செனகல் துருக்கியிடம் தோல்வியடைந்து வெளியேறிவிட்டது. ஆனால் ஸ்பெ



யினை ரைபிரேக்கர் முறையில் அதிசயிக்கத்தக்க வகையில் வென்று வரலாறு படைத்துள்ளது தென் கொரியா.

தொடர்ந்தும் சிறப்பாக விளையாடி இறுதிப் போட்டிக்குத் தகுதி பெறுமா என்பது கேள்விக் குறி. அரையிறுதியில் அது சந்திக்க இருப்பது ஜேர்மனியை. மிகப் பலம்மிக்க ஓர் அணியான ஜேர்மனியுடன் தென்கொரியா வெற்றி பெற்றால் மட்டுமே இறுதிப் போட்டிக்குத் தெரிவாக முடியும்.

முன்னேறிச் சென்று சடுதியாகத் தாக்குதல் ஆட்டம் நடத்துவதில் ஜேர்மனியர்கள் வல்லவர்கள். ஆனால், தென்கொரியர்களின் பின்களம் அவர்களது முன்களத்தைவிட சிறப்பாகச் செயற்படுகின்றது. தென்கொரிய பின் கள வீரர்களைத் தாண்டி முன்னேறி கோல் அடிப்பது ஜேர்மனிய முன்கள வீரர்களுக்குச் சிரமமானதாகவே இருக்கும்.

மறுபுறத்தில் மற்றோர் அரையிறுதி ஆட்டத்தில் பிரேஸில் - துருக்கி அணிகள் மோதுகின் றன. மிகத் திறமை வாய்ந்த வீரர்கள் பலர் நிரம்பிவழியும் அணி பிரேஸில். உதைபந்தாட்ட உலகில் தற்போது மிகப் பலம்மிக்கதாகக் கணிக்கப்படுவதும் அதுவே.

தகுதிகாண் ஆட்டங்களில் தட்டுத் தடுமாறியே இறுதிச் சுற்றுக்குத் தகுதி பெற்றது பிரேஸில். ஆனால் இதுவரை அது ஆடிய ஆட்டங்கள் எவற்றிலும் சமன் செய்யவோ, தோல்வியடையவோ இல்லை. அனைத்து ஆட்டங்களையும் வெற்றிகொண்டுள்ளது.

மறுபுறத்தில் பலம் மிக்கதான ஜேர்மனி முதற் சுற்றில் ஓர் ஆட்டத்தை சமன் செய்துள்ளது. தென்கொரியாவும் முதல் சுற்றில் ஓர் ஆட்டத்தை சமன் செய்துள்ளது. துருக்கி முதல் சுற்றில் ஓர் ஆட்டத்தை சமன் செய்து ஓர் ஆட்டத்தில் தோல்வியடைந்துள்ளது.

**பிரேம்**

இந்த நிலையில் நாளையும் நாளை மறுதினமும் அரையிறுதி ஆட்டங்கள் இடம்பெறவுள்ளன. உலக உதைபந்தாட்ட ரசிகர்கள் அத்தனை பேரின் கண்களும் ஜப்பான், தென்கொரியா நோக்கித் திரும்பியுள்



ளன. பிரிக்கப்பட்ட எட்டுப் பிரிவுகளில் தற்போது பிரிவு 'C', பிரிவு 'D', பிரிவு 'E' என்பன மட்டுமே எஞ்சியுள்ளன.

அவற்றுள் பிரிவு 'C' இல் மட்டும் பிரேஸில் மற்றும் துருக்கி ஆகிய இரு அணிகள் அரையிறுதிக்குத் தகுதிபெற்றுள்ளன.

அரையிறுதி ஆட்டங்களில் வென்று இறுதிப்போட்டிக்குத் தகுதி பெறும் அணிகள் எதிர்வரும் 30ஆம் திகதி ஜப்பானின் ஜோகஹாமா மைதானத்தில் கோலாகலமான கேளிக்கை நிகழ்வுகளுடன் ஆரம்பமாகி நடைபெறும் இறுதி ஆட்டத்தில் மோதுகின்றன.



தென்கொரிய நகரொன்றில் தமது அணி வென்ற மகிழ்ச்சியைக் கொண்டாடும் மக்கள் சமுத்திரம்

### 17 வீரர்களுக்கு சிவப்பு அட்டை

**இம்முறை உலக்கிண்ண உதைபந்தாட்டப் போட்டியில் இதுவரை நடந்த ஆட்டங்களில் 17 வீரர்களுக்கு சிவப்பு அட்டை காட்டப்பட்டுள்ளது. இவர்களில் பரகுவே, போர்த்துக்கல், துருக்கி அணிகளின் தலா இரு வீரர்கள் சிவப்பு அட்டை காட்டப்பட்டு வெளியேற்றப்பட்டுள்ளனர். அதேசமயம், இதுவரை நடந்த ஆட்டங்களில் 239முறை வீரர்களை எச்சரிக்கை செய்வதற்கான மஞ்சள் அட்டை காட்டப்பட்டுள்ளது. இதில் அமெரிக்க அணிக்கு 14 முறையும் ஜேர்மனி மற்றும் செனகல் அணிகளுக்கு தலா 13 முறையும் மஞ்சள் அட்டை காட்டப்பட்டுள்ளன.**






# சின்னஞ்சிறு விளம்பரம்

### வியாழ மாற்றம் எப்படி?

இம்மாத இறுதியில் வியாழமாற்றம் எங்கும் விற்பனையாகின்றது. ரூ.12/= ஜீவன் - பிரம்மம் ஐக்கிய வேதாந்த ரகசியம் (ஆத்மீக தொடர் வெளியீடும் அடங்கியது) எழுதியவர்:- "சத்யா", 3ஆம் மைல், ஆனைக்கோட்டை. T.P. No. 021-2753. (5125)

### மணமகளுக்கு தேவை

கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, 40 வயது, A/L சித்தியடைந்த, அழகிய பெண்ணுக்கு பெற்றோர் தகுந்த மணமகனைத் தேடுகிறார்கள். குறிப்பில் 1ஆம், 7ஆம், 8ஆம் வீட்டில் செவ்வாயும் சூரியனும் சேர்ந்திருப்பது விரும்பத்தக்கது. தாரம் இழந்தவரும் கவனிக்கப்படும். தொடர்பு: விளம்பர இல.1548, மே/பா உதயன், யாழ்ப்பாணம். (5126)

### இலகு திருமண சேவை

1975 திருவோணம் செவ்வாயற்ற Computer Science III சித்தியடைந்த U.K. வதிவுடமையுள்ளவருக்கு அழகான, படித்த பெண் தேவை. விரைவில் வரவுள்ளார். உள்ளூர், வெளியூர் மணமக்களுக்கு தொடர்பு கொள்ளவும். துரை. விமலா, நாச்சிமார் கோவிலடி, யாழ்ப்பாணம். (5154)

### தவறிவிட்டது

தர்மகுமார் சாந்தமதி என்பவரது தேசிய அ.அ. (இல.634850143V), வி.அ.அ. (இல.0907021589), Bag என்பன கோப்பாய்க்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடையில் 19.06.2002 புதன்கிழமை தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து இந்திரன் படமாடம், முட்டாஸ்கடைச் சந்தி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் ஒப்படைத்து உதவவும். (5132)

நல்லூரைச் சேர்ந்த நாகரத்தினம் செல்வரத்தினம் ஆகிய எனது தேசிய அடையாள அட்டை (இல.533203922V), விசேட அ.அட்டை (இல.0902046949) என்பன நல்லூர்க் கந்தசுவாமி ஆலயச் சுற்றாடலில் 21.06.2002இல் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் 639/3, நாவலர் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் ஒப்படைத்து உதவவும். சன்மானம் வழங்கப்படும். (5121)

### வீடு விற்பனைக்கு

இல.24, கச்சேரி - நல்லூர் பிரதான வீதியுடன் சகல வசதிகளும் கூடிய கச்சேரிக்கு அண்மையாகவும் அமைந்துள்ள 21/2 பரப்புக் காணியுடன் அமைந்த வீடு உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு:- பொ. விமலநாதன், இல.7, கற்பக விநாயகர் வீதி, கச்சேரி - நல்லூர் வீதி, யாழ்ப்பாணம். (5147)

நல்லூர், செட்டித் தெரு ஒழுங்கை, 34/5ஆம் நம்பர் வீடு, 3 பரப்பில் உள்ள கல்வீடும் கிணறும் கட்டடங்களும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: நா.தியாகராஜா, C/0 அ.சுந்தரராஜா, 11, 2ஆம் செப்பல் ஒழுங்கை, வெள்ளவத்தை, கொழும்பு - 06. தொலைபேசி: 580005 (C/22674)

### விற்பனைக்கு

Prima, Broiler குஞ்சுகள், பேட்டுக் குஞ்சுகள். இன்று மாலை பெற்றுக்கொள்ளலாம். புதுசாதி மருந்துகளும் உண்டு. எம்மிடம் இறைச்சிக் குஞ்சு வேண்டுவோரிடம் மட்டும் திருப்பி இறைச்சிக்கோழிகள் பெறப்படும். தொடர்பு: 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (5067)

8மாதம் நிரம்பிய கறுப்புநிற பொமனேரியன் ஆண் நாய்க்குட்டி விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 124, கோயில் வீதி, யாழ்ப்பாணம். (5140)

Town ACE வான் அனைத்து வளத்துடனும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: பக்தகுணசீலன், இராமலிங்கம் வீதி, முடமாவடி, பூங்கனிச் சோலைக்கு அண்மையில். T.P.No.2976 (5040)

திருநெல்வேலி சந்திக்கும் மருத்துவபீட வளாகத்திற்கும் சமீபமாக கோணாவளை ஒழுங்கையில் 5 ஆம் நம்பர் வீடு, 3 பரப்பில் உள்ள கல்வீடும் கிணறும் வான்பயிர்களும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: நா.தியாகராஜா, C/o அ.சுந்தரராஜா, 11ஆம் செப்பல் ஒழுங்கை, வெள்ளவத்தை, கொழும்பு - 06. தொலைபேசி 580005. (C/22673)

### தேவை

காஸ்வெல்டிங் அனுபவமுடைய ரிங்கர் (Tinker) உடன் தேவை. நேரில் வரவும். தொடர்பு:- 136, பிரதான வீதி, யாழ்ப்பாணம். (5091)

சமையல் செய்து வீட்டைப் பராமரிப்பதற்கு ஓர் ஆள் தேவை. நல்ல சம்பளம் தரப்படும். உடன் நேரில் வரவும். தனபாலசிங்கம், 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (5153)

## தேவாரத்திரட்டு முற்றோதல்

யாழ்ப்பாணம்,ஜூன்24

அகில இலங்கைத் திருமுறை மன்றம் மாதாந்த பௌர்ணமி தினத்தில் நடத்திவரும் அகத்தியர் தேவாரத்திரட்டு முற்றோதல், பன்னிரு திருமுறைப் பாராயணம், திருமுறை அர்ச்சனை ஆகிய நிகழ்வுகள் யாழ்ப்பாணம் நீராவியடி ஸ்ரீ ஜெய வீரகத்தி விநாயகர் ஆலய வருடாந்த அலங்கார உற்சவ நிறைவையொட்டி மேற்படி ஆலயததில இன்று திங்கட்கிழமை காலை 8.00 மணிக்கு நடைபெறும். (ஒ)

## கண்ணிவெடி அகற்றுவதில் பிரிட்டிஷ் குழுவும் ஈடுபடும்

கொழும்பு,ஜூன்24

பாரிய அளவில் கண்ணிவெடி அகற்றுவதில் பிரபலம் அடைந்த குழுவான பிரிட்டனைச் சேர்ந்த அமைப்பு ஒன்று விரைவில் யாழ். குடாநாட்டில் கண்ணிவெடி அகற்றும் பணியில் ஈடுபடவுள்ளதாகக் கூறப்படுகிறது.

சுமார் 500 நிபுணர்கள் இந்தப் பணியில் ஈடுபடவிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஆப்கானிஸ்தான், கம்போடியா மற்றும் மொஷாம்பிக் ஆகிய நாடுகளில் இந்த அமைப்பு கண்ணிவெடி அகற்றும் பணிகளில் ஈடுபட்டிருந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை -

குடாநாட்டில் புதைக்கப்பட்டுள்ள கண்ணிவெடிகளை அகற்றுவதற்கு சுமார் ஐந்து வருடங்கள் எடுக்கும் என்று தற்போது கண்ணி அகற்றும் பணியில் ஈடுபட்டிருக்கும் அமெரிக்கக் குழுவின் தலைவர் கூறியுள்ளார். (ஒ-4)


## கருத்தரங்குத் தொடர் - 03

*தலைப்பு:-* "தென்னாசிய அரசியல் சூழல் ஒரு சமகாலப் பார்வை"
*வழங்குபவர்:-* திரு.K.T.கணேசலிங்கம்
*(விரிவுரையாளர், அரசறிவியலும் சமூகவியல் துறை யாழ்.பல்கலைக்கழகம்)*
*நாள்:-* 25.06.2002 (செவ்வாய்க்கிழமை)
*நேரம்:-* பி.ப.3.00மணி
*இடம்:-* புவியியல்துறை விரிவுரை மண்டபம்.

ஆர்வலர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

அரசறிவியல் ஒன்றியம்
யாழ்.பல்கலைக்கழகம்

(5152)



## மனிதநேயங்கொண்ட நெஞ்சங்களே!
## வன்னிப் பெருநிலப் பரப்பில்

ஆதரவற்று நிர்க்கதியாய் நிற்கும் பெண்கள், சிறுவர்களுக்கு
உதவிக்கரம் கொடுக்கும் உன்னத பணியில்
தனித்துவமாக இயங்கும்

### "பெண்கள் அபிவிருத்தி புனர்வாழ்வு நிறுவனம்"

தனது சேவையில்

☞ உள்ளத்தைத் தொலைத்துவிட்டு உறவுகளைப் பிரிந்து உளநோயாளிகளாய் உலவும் பெண்களுக்கு
அக்கராயனில் ஒரு
**"வெற்றிமனை"** (உளநோயாளர் பராமரிப்பு இல்லம்)

☞ கணவனை இழந்து கையில் குழந்தையுடன் புகலிடமின்றிக் கதி கலங்கி நிற்கும் பெண்களுக்கு
புதுக்குடியிருப்பில் ஒரு
**"மலர்ச்சோலை"** (தாய்-சேய் நலன் காப்பகம்)

☞ இடப்பெயர்வுகளில் பெற்றோரையும் பெற்றோரின் முகவரிகளையும் தொலைத்துவிட்டு நிர்க்கதியாய் நிற்கும் இளைய சகோதரிகளுக்கு
புதுக்குடியிருப்பில் ஒரு
**"மேரி இல்லம்"** (இளம்பெண்கள் பராமரிப்பு இல்லம்)

☞ கல்வி கற்கும் வயதில் கடைத்தெருவில் கையேந்திக் காலத்தை ஓட்டும் இளந்தளிர்களின் எதிர்காலத்திற்காய்
முல்லைத்தீவில் ஒரு
**"செந்தளிர்"** (சிறுவர் பராமரிப்பு இல்லம்)

☞ வயதில் பெரியவர்களாய் வளர்ச்சி குறைந்தவர்களாய் அடுத்தவரை நம்பி நிற்கும் ஆதரவற்ற பெண்களுக்கு
விசுவமடுவில் ஒரு
**"நிறைமதி இல்லம்"**
(மூளை வளர்ச்சி குறைந்த இளவயதுப் பெண்கள் பராமரிப்பு)

இவர்களின் வளர்ச்சிக்கு
முன்னேற்றத்திற்கு
எதிர்கால நல்வாழ்விற்கு
நீங்களும் உதவுங்கள்...!
உங்கள் பங்களிப்பை அள்ளி வழங்குங்கள்...!!

*உங்கள் தொடர்புகளிற்கு:*
பெண்கள் அபிவிருத்தி புனர்வாழ்வு நிறுவனம்,
முதன்மைச் செயலகம்,
யாழ்.வீதி,
கிளிநொச்சி.

*உங்கள் சேவைக்கு:-*
பெண்கள் அபிவிருத்தி புனர்வாழ்வு நிறுவனம்,
இலங்கை வங்கி,
சேமிப்பு க/கு இல.: 11639,
முல்லைத்தீவு.

(C/22672)


# கல்விச்சாலைக் காட்சிகள்



புலோலி புற்றளை மகா வித்தியாலயத்தில், உலக வங்கியின் உதவியுடன் நிர்மாணிக்கப்பட்ட நூலகத்தைத் திறந்துவைக்க வருகை தந்த பாடசாலைகள் கல்வி அமைச்சர் சுரநிமல் ராஜபக்ஷ அழைத்து வரப்படுவதையும், வடக்கு - கிழக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் ஜே.இஸ்ஸதீன், வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வே.தி.செல்வரட்ணம், இந்துகலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன், யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம், அதிபர் திருமதி சகுந்தலாதேவி இந்திரராஜா ஆகியோரும் கூட வருவதையும் படத்தில் காணலாம். (ம-173)



தமிழீழ மாணவர் எழுச்சிநாள் நிகழ்வு நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெற்றபோது, நிகழ்வுக்குத் தலைமைதாங்கிய மாணவன் எஸ்.குமணன் தலைமையில் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி உபஅதிபர் எஸ்.சிவானந்தன், நெல்லியடி மத்திய மகா வித்தியாலய அதிபர் எஸ்.சேதுராஜா, வடமராட்சி வலய ஆசிரிய பயிற்சி நிலைய முகாமையாளர் என்.குணசீலன், நாகர்கோவில் மகா வித்தியாலய அதிபர் சி.மகேந்திரன், விடுதலைப் புலிகளின் யாழ்.மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி ஆகியோர் மௌன அஞ்சலி செலுத்துவதைக் காணலாம். (ம-173)



கொட்டடி கிராம அபிவிருத்திச் சங்கத்தினால் நடத்தப்பட்ட கணனிப் பயிற்சியில் பங்குபற்றியோருக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது.

பயிற்சியாளர் ஒருவருக்கு பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை அவர்கள் சான்றிதழ் வழங்குவதைப் படத்தில் காணலாம். (ம-ரி)



யாழ்.இந்துக் கல்லூரியின் வருடாந்தப் பரிசளிப்பு விழா அண்மையில் இடம்பெற்றது. இதில் பிரதமவிருந்தினராகக் கலந்துகொண்ட இலங்கை வெளிவிவகார அமைச்சின் நிர்வாகப் பணிப்பாளர்நாயகம் சி.எஸ். பூலோகசிங்கமும் அவரது துணைவியார் ஜெயமணி பூலோகசிங்கமும் கல்லூரி அதிபர் எஸ்.ஸ்ரீகுமரனால் விழா மண்டபத்துக்கு அழைத்து வரப்படும் காட்சி. (ம)

உதயன்

# தேர்தல் முறையில் இப்போது மாற்றமா?

பெரும்பான்மைக் கட்சிகளான அரசாங்கக் கட்சியும் எதிர்க்கட்சியும் அரசியல் சார்ந்த பல்வேறு விடயங்களில் ஒன்றுக்கொன்று விரோதிகள்; எதிரிகள்!

"இந்த இரண்டு கட்சிகளுக்கும் பொதுவான எதிரிகள்" என்று சிறுபான்மை மக்களைச் சொல்லலாம்.

மனமிரங்கி அல்லது தவிர்க்கமுடியாத நிலையில் சிறுபான்மை மக்களுக்கு ஏதாவது நன்மை செய்ய அரசாங்கக் கட்சி முன்வந்தால் எதிர்க்கட்சி விடாது. எத்தனையோ முட்டுக்கட்டைகளைப் போடும். கூட்டம் போட்டும் ஆர்ப்பாட்டங்கள், பேரணிகள் நடத்தியும் கூத்தடித்துக் கூப்பாடு போடும்.

ஆனால், சிறுபான்மையினரை அடக்கி ஒடுக்குவது அல்லது அவர்களின் முன்னேற்றத்தை முடக்க அவர்களைப் பலவீனப்படுத்துவது என்றால் அரசாங்கக் கட்சியும் எதிர்க்கட்சியும் ஒன்றோடு ஒன்று சேர்ந்து கச்சை கட்டிக்கொண்டு நிற்கும்.

தேர்தல் நடைமுறையை மாற்றும் விடயத்தில் அது இப்போது நடைபெறுகிறது.

முன்னர் இருந்த தொகுதிவாரித் தேர்தல் முறைக்குப் பதிலாக இப்போது மாவட்ட ரீதியான விகிதாசாரத் தேர்தல் முறை நடைமுறையில் இருக்கிறது.

இந்தத் தேர்தல் முறை அரசியல் கட்சிகளை மையமாகக் கொண்டது. பெரிய கட்சிகளுக்கு என்று இல்லாமல் சிறுபான்மையினக் கட்சிகளுக்கும் சிறிய கட்சிகளுக்கும் கூட நாடாளுமன்றத்தில் உரிய இடம்கிடைக்க இந்தத் தேர்தல்முறை வழிசெய்கிறது.

அதேவேளை எந்த ஓர் அரசியல் கட்சியும் இந்தத் தேர்தல் முறையில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை ஆசனங்களைப் பெறமுடியாதுள்ளது.

எந்தப் பெரிய கட்சிக்கும் ஆட்சி அமைப்பதற்கு வேண்டிய பெரும்பான்மை இடங்கள் கிடைப்பது கூடக் கஷ்டமாக இருக்கிறது.

அதனால் தேர்தலில் மற்றக் கட்சிகளை விடக் கூடுதலான இடங்களைக் கைப்பற்றிய கட்சிகூட சிறுபான்மைக் கட்சிகளின் ஆதரவைப் பெற்றே வேண்டிய பெரும்பான்மையைக் காட்டி அரசாங்கத்தை அமைக்கவேண்டியிருக்கிறது.

இதை வேறுவிதமாகச் சொல்வதானால் சிறுபான்மைக் கட்சிகளின் தயவிலேயே எந்தப் பெரும்பான்மைக் கட்சியும் ஆட்சி நடத்தவேண்டிய நிலையை விகிதாசாரத் தேர்தல் முறை ஏற்படுத்துகின்றது.

அதனால், சிறுபான்மைக் கட்சிகளும் ஆட்சியில் பங்குகொள்ள முடிகிறது. அரசை நிர்ப்பந்தித்துச் சில காரியங்களைச் செய்விக்கக் கூடியதாகவும் இருக்கிறது. சிறுபான்மைக் கட்சி கேட்டதை அரசாங்கம் செய்யாவிட்டால் சிறுபான்மைக் கட்சி தனது ஆதரவை விலக்கிக் கொள்ளும். உடனே அரசு பெரும்பான்மை இல்லாமல் கவிழ்ந்துவிடும்.

இதை இப்படிப் பச்சையாகச் சொல்லாமல் ஸ்திரமான ஆட்சியை உறுதிசெய்வதற்கு தேர்தல் முறையில் மாற்றம் செய்யவேண்டியது அவசியமென்று ஆளும் கட்சியும் எதிர்க்கட்சியும் கூறுகின்றன.

மாவட்ட ரீதியான விகிதாசாரத் தேர்தல் முறையும் தொகுதி வாரியான தேர்தல் முறையும் சேர்ந்த கலப்புத் தேர்தல் முறை ஒன்றைப் புதிதாக நடைமுறைக்குக் கொண்டு வருவதே அரசினதும் எதிர்க் கட்சினதும் திட்டம். இதற்கு இரண்டு தரப்புகளும் வரிந்து கட்டிக்கொண்டு நிற்கின்றன.

இந்தக் கலப்புத் தேர்தல் முறை புகுத்தப்படுமானால் நாடாளுமன்றத்துக்குத் தெரிவு செய்யப்படும் தமிழ், முஸ்லிம் சிறுபான்மை உறுப்பினர்களின் எண்ணிக்கை வெகுவாகக் குறைந்துவிடும்.

அதன் விளைவு அரசாங்கத்தை அமைப்பதில் சிறுபான்மைக் கட்சிகளுக்கு இப்போதுள்ள முக்கியத்துவம் இல்லாமல் போய்விடும். சிறுபான்மைக் கட்சிகளின் உதவி இல்லாமலே பெரும்பான்மைக் கட்சியில் ஏதாவது ஒன்று ஆட்சியை அமைக்கும்; தனிக்காட்டுத் தர்பார் நடத்தும்; சிறுபான்மைக் கட்சிகள், அரசைக் கொண்டு எதையும் செய்விக்கமுடியாத நிலை தோன்றும்.

இனப் பிரச்சினைக்குத் தீர்வு ஏற்பட்டு அதிகாரப் பங்கீடு நடந்த பின்னர் எந்தக் கட்சி எப்படிப் பதவிக்கு வந்தாலும் சிறுபான்மை மக்களுக்கு பெரிதாக பாதிப்பு ஏதும் ஏற்பட இடமில்லை. ஆகவே தேர்தல் முறை மாற்றம் இப்போது ஏற்படுத்தப்படுவதற்கு சிறுபான்மைச் சமூகங்கள் ஒப்புதல் அளிக்கமுடியாது.

---

### வன்னிப்பகுதியிலிருந்து

# மீள்குடியமர வருவோருக்கு உதவித் திட்டமேதுமில்லை

## வறிய குடும்பங்கள் விசனம்

இடம்பெயர்ந்து வன்னிப் பிரதேசத்தில் தங்கியிருந்துவிட்டு சமாதானச் சூழ்நிலையில் மீளக் குடியமர்வதற்காக குடாநாட்டுக்குத் திரும்பும் வறுமைக்கோட்டின் கீழுள்ள குடும்பங்களுக்கு உதவ திருப்திகரமான திட்டங்கள் எதனையும் அதிகாரிகளோ, அரசு சார்பற்ற நிறுவனங்களோ செயற்படுத்தவில்லை என சம்பந்தப்பட்ட பொதுமக்கள் குறை கூறியுள்ளனர்.

மீளக்குடியமர வருபவர்களில் இருப்பிட வசதியற்ற குடும்பங்கள் தமக்கு இருப்பிட வசதியை ஏற்படுத்தித் தருமாறு பிரதேச செயலர்களைக் கோரி வருவதாகக் கூறப்படுகிறது.

ஏ-9 தரைவழிப் பாதை திறக்கப்பட்டதைத் தொடர்ந்து வன்னி நிலப்பரப்பில் இருந்து மீண்டும் தமது சொந்த இடங்களில் மீளக்குடியமர வந்த குடும்பங்களில், வீடுகளை இழந்தும் உலர் உணவு தவிர்ந்த பாத்திரங்கள், தளபாடங்கள் அற்ற நிலையிலும் உள்ள குடும்பங்களே மீளக்குடியமர்வதற்கான உதவிகளை கிராம சேவையாளர்கள் ஊடாகப் பிரதேச செயலர்களிடம் கோரியுள்ளன.

இத்தகைய குடும்பங்களின் விவரங்களை பிரதேச செயலர்கள் திரட்டி வருகின்றபோதும் அவர்களுக்கு உடனடி உதவிகளை வழங்கக்கூடிய சாத்தியக்கூறுகள் இல்லை எனப் பிரதேச செயலக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (ஓ-180)




---

### வேலணையில் புலி உறுப்பினர்கள் மீதான தாக்குதல்:

# ஒருபுறம் சமாதான அழைப்பு மறுபுறம் அராஜக வன்முறை

## இந்து சமயப் பேரவை கண்டனம்

யாழ்ப்பாணம்,ஜூன்24

- 'சமாதானத்துக்கு வாருங்கள்' என்று அழைப்பு விடுத்துவிட்டு அராஜகமான முறையில் தாக்குதல் நடத்துவது முறையற்றது.

வேலணையில் விடுதலைப் புலிகளின் அரசியல் பிரிவினர் மீது நடத்தப்பட்ட தாக்குதலைக் கண்டித்து வெளியிட்ட அறிக்கையில் இந்து சமயப் பேரவை இவ்வாறு தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக பேரவை விடுத்துள்ள அறிக்கையில் -

தமிழீழ விடுதலைப் புலிகளின் தீவகப் பொறுப்பாளர் செம்மணன் மற்றும் தயாளன் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் சமாதானத்தை குலைக்கும் அநாகரிகமான நடவடிக்கையாகும். இதனை இந்துசமயப் பேரவை மிக வன்மையாகக் கண்டிக்கிறது.

தமிழ் மக்கள் தமது உரிமைகளை வென்றெடுக்க காலம் காலமாக நடத்திய சாத்வீகப் போராட்டங்கள் கொச்சைப் படுத்தப்பட்ட காரணத்தினாலேயே இளைஞர்கள் ஆயுதம் ஏந்த வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டனர். இவை இவ்வாறிருக்க, ஆயுதப் போராட்டத்தை நிறுத்தி சமாதானத்திற்கு வாருங்கள் என்று அழைப்பு விடுத்துவிட்டு தீவகப் பகுதியில் அராஜகமான முறையில் தாக்குதல் நடத்தப்பட்டிருப்பதை அறிந்து மிக மன வேதனை அடைகின்றோம்.

இத்தாக்குதல் சமாதானத்துக்கு எதிரான அச்சுறுத்தலாகும்.

அரசாங்கம் இத்தக் கொடூரச் செயலில் ஈடுபட்டவர்களை இனங்கண்டு சட்ட நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும்.

ஆயுதம் தாங்கி நிற்பவர்கள் நிதானமாக நடவாதுபோனால் அவர்கள் தமிழ்ப்பிரதேசங்களை விட்டு விலகுவதை விட வேறு வழியில்லாது போய்விடும்.

- என்று அதில் உள்ளது. (ஒ)

---

# கடந்த 6 மாதங்களில் 1,564 வீதி விபத்துக்கள்!

யாழ்.பொலீஸ் நிலைய அதிகார எல்லைக்குட்பட்ட பகுதியில் கடந்த 6 மாதங்களில் மட்டும் ஆயிரத்து 564 வீதி விபத்து சம்பவங்கள் இடம்பெற்றிருப்பதாக யாழ்.பொலீஸ் நிலையப் புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன.

கடந்த வருடத்தைவிட இந்த வருடம் இந்தத் தொகை மிகவும் அதிகமானதென்று பொலீஸார் தெரிவித்தனர்.

கடந்த ஏப்ரல் மாதம் ஏ-9பாதை திறக்கப்பட்டதையடுத்து தென்பகுதிகளில் இருந்து ஏராளமான வாகனங்கள் யாழ்ப்பாணத்துக்கு வந்திருப்பது விபத்துக்கள் அதிகரிக்க பிரதான காரணம் என்று தெரிவிக்கப்பட்டது.

யாழ்.பொலீஸ் நிலைய அதிகார எல்லைக்குட்பட்ட பகுதியில் கடந்த ஆறு மாதங்களில் இடம்பெற்ற விபத்துகளில் சிக்கி மூவர் உயிரிழந்துள்ளனர். இந்த விபத்துக்களால் பலர் காயங்களுக்கு உள்ளாகியிருக்கின்றனர். (ஒ-4)

---

# மருதங்கேணி பாடசாலைகளை மீள ஆரம்பிக்கக் கோரிக்கை

வடமராட்சி,ஜூன்24

மருதங்கேணிப் பிரதேசத்தில் மேலும் பல கிராமங்களில் குடும்பங்கள் அதிக எண்ணிக்கையில் மீளக் குடியமர்ந்து வருவதையடுத்து அப்பகுதியில் இயங்காதுள்ள 5 பாடசாலைகளை மீண்டும் ஆரம்பிக்குமாறு மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் வி.ப.வேலாயுதபிள்ளை, வடமராட்சி வலயக் கல்வித் திணைக்களத்தைக் கோரியுள்ளார்.

புதிதாக மக்கள் மீளக் குடியமர்ந்துள்ள இடங்களில் வசிக்கும் ஆரம்ப வகுப்பு மாணவர்கள் நீண்டதூரம் நடந்து சென்று கல்வி கற்க வேண்டியுள்ளதாகவும் - இதன்காரணமாக அவர்களில் பலர் பாடசாலைகளுக்குச் செல்வதை நிறுத்தும் நிலையில் உள்ளதாகவும் -

அப்பகுதி மக்கள் உதவி அரசாங்க அதிபரிடம் முறையிட்டுள்ளனர். இதனையடுத்தே இக்கோரிக்கை வட மராட்சி வலயக் கல்வித் திணைக்களத்திடம் விடுக்கப்பட்டுள்ளது.

மாமுனை அ.த.க.பாடசாலை, தாளையடி றோ.க.த.க. பாடசாலை, செம்பியன்பற்று றோ.க.த.க. பாடசாலை, வெற்றிலைக்கேணி பரமேஸ்வரா வித்தியாலயம், கேவில் அ.த.க. பாடசாலை ஆகியவற்றையே மீள ஆரம்பிக்கும்படி கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (ஒ-182)

**நாளை**

ஆனி 11
செவ்வாய்க்கிழமை
(25.06.2002)
திதி : பிரதமை
பின்னிரவு 3.15 வரை.
நட்சத்திரம்: மூலம்
முற்பகல் 11.15 வரை.
சுபநேரம்: 10.25 - 11.55
ராகுகாலம்: 2.55 - 4.25
(பழைய நேரப்படி)

**உதயவாக்கு**

உயர்ந்த பண்புகளை கைவிட்டு ஒழுக்கமின்றி நடந்துகொள்பவர்கள் தேங்காய் உடைத்து, திருவிழா செய்து, தட்சணை கொடுத்து கோயில் கட்டினாலும் அவற்றை இறைவன் ஏற்பதில்லை.

---

# விடுமுறை நாள்களிலும் செயலமர்வு, கருத்தரங்கு

## பாதிப்பு என்கிறார்கள் ஆசிரியர்கள்

அச்சுவேலி,ஜூன்24

ஆசிரியர்களுக்கான சேவைக்காலப் பயிற்சிகள் மற்றும் தொழில்சார் கருத்தரங்குகள் சனி, ஞாயிறு, போயா தினம் உள்ளிட்ட விடுமுறை தினங்களில் நடத்தப்படுவதால் தனிப்பட்ட தமது கருமங்களை நிறைவு செய்யமுடியாமல் சிரமப்படுவதாக ஆசிரியர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

ஆசிரியர்களுக்கான சேவைக்காலப் பயிற்சி, தொழில்சார் செயலமர்வுகள், கருத்தரங்குகள் என்பன பெரும்பாலும் சனி, ஞாயிறு தினங்களிலும் பொதுவிடுமுறை தினங்களிலும், போயா விடுமுறை நாள்களிலும் குறுகியகால அறிவிப்புடன் நடத்தப்படுகிறன. இதனால் வெளிவாரிப் பட்டப்படிப்பைத் தொடருவோர், விடுமுறை தினங்களில் கணனிப் பயிற்சியை மேற்கொள்வோர் சனிக்கிழமைகளில் நடைபெறும் யாழ்.பல்கலைக்கழக பகுதி நேர பட்டப்பின் கல்வி டிப்ளோமா பயிற்சிக்குச் செல்வோர் சனி, ஞாயிறு விடுமுறை தினங்களில் நடைபெறும் தேசிய கல்வி நிறுவகம் மற்றும் திறந்த பல்கலைக் கழகத்தினால் நடத்தப்படும் பட்டப்பின் கல்வி டிப்ளோமா பயிற்சி வகுப்புக்கு செல்வோர் எனப் பெரும் எண்ணிக்கையான ஆசிரியர்கள் பாதிப்பை எதிர்நோக்குவதாகவும் -

அத்துடன் தமது தனிப்பட்ட அலுவல்களில் ஈடுபடமுடியாமல் சிரமப்படுவதாகவும் - ஆசிரியர்கள் தெரிவிக்கின்றனர். இது தொடர்பாக ஆசிரியத் தொழிற்சங்கங்களுக்கும் அவர்கள் முறையிட்டுள்ளதாகக் கூறப்படுகிறது. (ஒ-11)

---

### வீடு திருத்துவதற்கான

# 25ஆயிரம் கொடுப்பனவு தொடர்ந்து வழங்கப்படுமா?

## வறிய குடும்பங்கள் கேள்வி

அச்சுவேலி,ஜூன்24

இராணுவ நடவடிக்கையால் சேதமடைந்திருந்த வீடுகளைத் திருத்துவதற்கு வழங்கப்பட்டு வந்த 25ஆயிரம் ரூபா உதவிக் கொடுப்பனவு தொடர்ந்து வழங்கப்படுமா அல்லது இடைநிறுத்தப்பட்டுவிட்டதா என்பது தெரியாமல் வறுமைக்கோட்டிற்குக் கீழ் வாழும் குடும்பங்கள் பல காத்திருப்பதாகக் கூறப்படுகிறது.

வீடுகளைத் திருத்தி அமைப்பதற்கு கிராம சேவையாளர் ஊடாக 25ஆயிரம் ரூபா பணம் வறுமைக்கோட்டிற்குக் கீழ் உள்ள குடும்பங்களுக்கு முன்னர் வழங்கப்பட்டு வந்தது. இந்த நிதி உதவியைப் பெறுவதற்கு விண்ணப்பித்த பலர் அதற்கான ஆவணங்களைப் பூரணப்படுத்தி சமர்ப்பித்து பல மாதங்கள் கடந்த நிலையில் இன்னமும் பணம் கிடைக்கவில்லை என கவலை தெரிவிக்கின்றனர்.

புதிய அரசு பதவியேற்றபின்னர் குடாநாட்டில் 25ஆயிரம் நிவாரணக் கொடுப்பனவு தொடர்பான பணிகள் தேங்கிக் கிடப்பதாகவும் -

அதற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி பொதுத் தேர்தல் காலத்தில் கைமாறிவிட்டதாகவும் -

அரசு வட்டாரங்களில் கூறப்படுகிறது.

வீடு திருத்துவதற்கு பணம் கிடைக்கும் எனக் காத்திருக்கும் பொதுமக்களின் நிலைமையை உணராது உயர் அதிகாரிகள் மௌனத்தைக் கடைப்பிடிப்பது ஏன் என்று வறுமைக் கோட்டின் கீழ் உள்ள குடும்பங்கள் கேள்வி எழுப்புகின்றன. (ஒ-11)

## வீதியைத் திருத்தக் கோரிக்கை

அரியாலை

எதிர்வரும் மாரிகாலத்திற்கு முன் பாக நீர்வேலி தெற்கு [illegible] வீதியை புனரமைத்துத் தருமாறு இந் தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத் துள்ளனர்.

மழைகாலங்களில் இந்த [illegible] வெள்ளம் தேங்கி நிற்பதனால் [illegible] கள் பெரும் சிரமத்தை அனுபவிக்க நேரிடுவது குறிப்பிடத்தக்கது.

# அதிகாரிகள் அசமந்தத்தால் மீள்குடியமர்ந்தோர் அவதி

வலி.வடக்கு,ஜுன்24

முல்லைத்தீவு மாவட்டத்தில் இருந்து யாழ்.மாவட்டத்திற்கு மீள்குடி யேற வருபவர்கள் அரச ஊழியர் களின் அசமந்தத்தால் நிவாரணம் பெறுவதில் பல்வேறு சிரமங்களை அடைய நேரிட்டுள்ளதாகக் கூறப்படு கிறது.

யாழ். மாவட்டத்தில் இவர்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கு முல்லைத் தீவில் கடைசியாக எப்போது நிவா ரணம் பெற்றார்கள் என்ற விவரத்தை முல்லைத்தீவு மாவட்ட பிரதேச செய லகங்கள் குறிப்பிட்டு கடிதங்களை அனுப்பவில்லை.

குறிப்பிட்ட குடும்ப அட்டைக்குரிய வர்கள் நிவாரணம் பெறத்தகுதி யுடையவர் என்று மட்டுமே கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. இதன் காரண மாக இவர்கள் ஏற்கனவே எந்தக் கட்டம் வரை நிவாரணம் பெற்றவர் கள் என்பது தெரியாமல் மீண்டும் உரியவர்கள் மேற்கூறிய விவரங்களை முன்பு இருந்த பிரதேச செயலாளரிடம் குறித்து வாங்கி வரும்படி திருப்பி அனுப்பப்பட்டு வருகின்றனர்.

அரச உத்தியோகத்தர்கள் சரி யான விவரங்களை கொடுத்து விடா மையால் பொதுமக்கள் பணச்செலவு செய்து அலைந்து திரிய வேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டிருப்பதா கக் கூறப்படுகிறது.

(ஒ-86)

## கண்ணீர் அஞ்சலி

எமது சக ஆசிரியையான

திருமதி [illegible] அவர்களது

அன்புத் தாயார் திருமதி [illegible]தம்பித்துரை அன்னலட்சுமி

அவர்களின் திடீர் மறைவினால் நாம் ஆழ்ந்த கவலை அடைவ துடன் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிக்கிறோம்.

இசையாசிரியர் கழகம்
யாழ்.கல்வி வலயம்.

(5146)

---

யாழ்.மாவட்ட ரீதியான ஆண், பெண்
இருபாலாருக்குமான கரம் ஒற்றையர், இரட்டையர்
## [illegible]ப்பு ஆட்டங்களின் - சுற்றுப் போட்டி

யாழ்.பல்கலைக்கழகத்தின் விளையாட்டவையின் கரம் அணியினால் நடாத்தப்படும் இச்சுற்றுப்போட்டியில் பங்குபற்ற விரும்பும் போட்டியாளர்கள் விண்ணப்பப்படிவங்களை உடற் கல்வியலகில் பெற்று 06.07.2002ஆம் திகதிக்கு முன் பூர்த்தி செய்து ஒப்படைக்கவும். மேலதிக விவரங்களை உடற்கல் வியலகில் பெற்றுக்கொள்ளலாம்.

தலைவர்
கரம் அணி (பெண்கள்).

(5124)

## புதுக்கடைத் திறப்புவிழா அழைப்பு

உ

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான சித்திரபானு வருஷம் ஆனித்திங்கள் 10ஆம் நாள் (24.06.2002) திங்கட்கிழமை காலை எம்மால் புதிதாக ஆரம்பித்து வைக்கப்படவுள்ள

### * கரன் புத்தகசாலை *

என்னும் வியாபார ஸ்தாபனத்தை 14, பஸ் நிலையம், யாழ்ப்பாணத்தில் திறந்து வைக்கவிருப்பதால் அத்தருணம் அனைவரும் வந்து விழாவைச் சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இந்திய சஞ்சிகைகள், புத்தகங்களின் யாழ்ப்பாண முகவரான எங்களிடம் பாடப் புத்தகங்கள், பாட உபகரணங்கள், கொப்பிகள், அப்பியாசப் புத்தகங்கள் போன்ற வற்றை மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம் என்பதை அறியத் தருவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றோம்.

சி.செல்வராஜா, (உரிமையாளர், கரன் புத்தகசாலை).

(4958)

## பதவி வெற்றிடம்

GOLDEN EAGLE SECURITY

### கோல்டன் ஈகிள் பாதுகாப்புச் சேவை வெற்றிடங்கள்

1. a. கனிஷ்ட பாதுகாப்பு உத்தியோகத்தர் (Junior Security Officer)
(30 - முப்பதுக்கு மேற்பட்ட வெற்றிடங்கள் உண்டு)
2. கல்வித் தகைமை: க.பொ.த. (சா.த.) சித்தி
(ஓய்வுபெற்ற பொலீஸ்/படை உத்தியோகத்தர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்)
3. உயரம் : 5'4" (குறையாமல்)
மார்பு : 32" (குறையாமல்)
(நல்ல கண் பார்வையும், நல்ல திடகாத்திரமும் இருத்தல் வேண்டும்)
(25 வயதிற்கு குறையாதிருத்தல் வேண்டும்)

சம்பளம்: தொடக்க சம்பளமாக ரூபா 3500/-. மற்றும் கடமை வரவுக்குரிய ஊதியம் (Attendance Bonus) வழங்கப்படும்.

(தகுதிக்கேற்ற சம்பள மாற்றம் உண்டு.)

**Walk In Interview:-** 24.06.2002 திங்கட்கிழமை காலை 10.00 மணி.

*(கிராம அதிகாரியின் நற்சான்றிதழ்களுடன் வரவும்)*

43, கல்லூரி வீதி
(யாழ்.இந்து மைதானத்திற்கு முன்பாக),
யாழ்ப்பாணம்.
- பணிப்பாளர்.

(C/22671)

## வைத்தியம்

செங்கண்மாரி, அல்சர்,
ஆஸ்துமா, வாதநோய்கள்,
வலிப்பு நோய், பீனிசம்,
தலையிடி, தலைகால்
அவியல், சரும நோய்கள்,
மாதவிடாய்க்குத்து,
இரத்தப்போக்கு,
வெள்ளைக்கசிவு,
கருவழிதல், மகப்பேறின்மை,
குழந்தை வைத்தியம்,
வீரியக்குறைவு,
மூலவியாதிகள்,
மூத்திரரோகங்களில்
பிரபல்யமானவர்.
*சகல வியாதிகளையும் குணப்படுத்துபவர்:*

வேலணை வைத்திய கலாநிதி
**சி.இராசரத்தினம்**
121, 2ஆம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம்.
*தொலைபேசி எண்: 2459*

(4668)

## சுன்னாகத்தில்!

### எரிக்கணேஷ்

சுன்னாகத்தில் நிலைகொண்டுள்ள 'எரிக்கணேஷ்' ஸ்தாபனம் தொடர்ந்தும் விசேட கழிவு வழங்க முன்வந்துள்ளது.

- கண் பரிசோதித்து கண்ணாடிகள் பெற்றிட....
- முக அமைப்புக்கேற்ப பற்களைப் பொருத்திட....
- மிதப்புப் பற்களுக்கு கிளிப் போட்டுக்கொள்ள....

### எரிக்கணேஷ்

564, 566, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
*80,கே.கே.எஸ்.வீதி, சுன்னாகம்.*
*91, கொக்குவில் சந்தி, கொக்குவில்.*

(5137)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

| மண்ணில் | விண்ணில் |
|---|---|
| 17 - 06 - 1933 | 27 - 05 - 2002 |



### திருமதி மேரி மாகிறேற் ஞானப்பிரகாசம்

எமது குடும்பத்தின் குலவிளக்காய், அன்பின் திருவுருவாய் பாசத் தின் பிறப்பிடமாய்த் திகழ்ந்து, எம்மை ஆறாத்துயரில் ஆழ்த்திச் சென்று இறைபதம் எய்திய எங்கள் அன்புத் தெய்வம் திருமதி ஞா.மேரி மாகிறேற் அவர்களின் மரணச்சடங்கிலும் வழிபாடு களிலும் கலந்து அவரது ஆத்மசாந்திக்காக செபித்த அருட்தந்தை யர், அருட்சகோதரிகளுக்கும், நேரிலும், பத்திரிகை மூலமாகவும் இறுதி அஞ்சலி செலுத்திய அன்பு[illegible] நண்பர்கள், உற்றார், உற வினர்கள் அனைவருக்கும் எமது உளம் நெகிழ்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

அன்னாரின் ஆன்ம இளைப்பாற்றிற்காக 26.[illegible].2002 (புதன்) மு.ப. 11.00 மணிக்கு [illegible], கோயில் வீதி, அருள் ஆச்சிரமத்தில நடைபெறவுள்ள இரங்கல் திருப்பலிப் பூசையில் பங்குபற்றுமாறும் அன்று எமது இல்லத்தில் நடைபெறும் மதியபோசன விருந்துபசாரத் திலும் கலந்து சிறப்பிக்குமாறும் அனைவரையும் அன்புடன் அழைக் கின்றோம்.

*ஆ.ஞானப்பிரகாசம்,*
*7/1 மத்தியூஸ் வீதி,*
*யாழ்ப்பாணம்.*

கணவர், பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(5120)

---

உ
சிவமயம்

## ஈச்சமோட்டை கலட்டிப்புலம் ஸ்ரீ ஞானவைரவர் தேவஸ்தானம்

*சித்திரபானு வருஷம் - 2002*

### அலங்கார உற்சவ விஞ்ஞாபனம்

*24.06.2002 – 08.07.2002 வரை தினமும் மாலை 5.00 மணிக்கு பூசையுடன் ஆரம்பமாகி 6.00 மணியிலிருந்து 7.00 மணிவரை – தெய்வீகப் பேருரைகள் இடம்பெற்று, தொடர்ந்து சுவாமி உள்வீதி வலம்வருவார்.*

தெய்வீகப் பேருரைகள் ஆற்றுவோர் விவரம் பின்வருமாறு :-

| | | |
|---|---|---|
| 24.06.2002 | "இந்து மதம் எங்கே செல்கிறது?" | - விகடகவி மு.திருநாவுக்கரசு |
| 25.06.2002 | "இந்து மதத்தில் வைரவ வழிபாடு" | - சைவப்புலவர் கந்த சத்தியதாசன் |
| 26.06.2002 | "சைவத் திருமுறைகள்" | - சைவப்புலவர் கந்த சத்தியதாசன் |
| 27.06.2002 | "தாய்மையே இறைவனின் முதல் வடிவம்" | - மதுரகவி காரை எம்.பி.அருளானந்தன் |
| 28.06.2002 | "கந்தபுராணம் காட்டும் ஆன்மீகம்" | - சைவப்புலவர் நித்திய தசிதரன் |
| 29.06.2002 | "அழுதால் உனைப்பெறலாம்" | - சைவப்புலவர் நித்திய தசிதரன் |
| 30.06.2002 | "இறைவழிபாடு" | - அருண்மொழிச்செல்வன் த.ஜெசீதன் |
| 01.07.2002 | "தமிழர் கலாசாரம்" | - மதுரகவி காரை எம்.பி.அருளானந்தன் |
| 02.07.2002 | "பெரியபுராண வாழ்வியல்" | - தெய்வத்தமிழ்செம்மல் க.நவநீதன் |
| 03.07.2002 | "கடமையைச் செய், பலனை எதிர்பாராதே" | - தெய்வத்தமிழ்செம்மல் க.நவநீதன் |
| 04.07.2002 | "தெய்வம் நமக்குத் துணை" | - மதுரகவி காரை எம்.பி.அருளானந்தன் |
| 05.07.2002 | "மானுடம் வென்றதம்மா" | - சைவப்புலவர் கந்த சத்தியதாசன் |
| 06.07.2002 | "குருவருளும் திருவருளும்" | - சைவப்புலவர் நித்திய தசிதரன் |

07.07.2002 கவியரங்கம் "நெஞ்சம் மறக்குமா.....?"
தலைவர், தமிழன்பன், மதுரகவி காரை. எம்.பி.அருளானந்தன்
(ஈழத்தின் தலைசிறந்த இளம் தலைமுறைக் கவிஞர்கள் பங்கேற்கும் சிறப்பு நிகழ்ச்சி)

08.07.2002 அலங்கார உற்சவ நிறைவுநாள். மாலை சுவாமி வெளிவீதி பவனி வருவார்.
09.07.2002 நண்பகல் பிராயச்சித்த அபிஷேகமும் அன்னதானமும் இடம்பெறும்.

- ஆலய பரிபாலன சபையினர்.

*விளம்பர அன்பளிப்பு:*
**செல்வம் வீடியோ சென்ரர்**
*கொழும்புத்துறை வீதி, பாண்டியன்தாழ்வு.* *உரிமையாளர்:* சு.சிவநாதன் (செல்வம்). (5148)





A PARAS PRODUCTS

# D'cold

**D'cold Balm, D'cold Inhaler & D'cold Cough Drops**

ஜலதோஷம், மூக்கடைப்பு, தொண்டை கரகரப்பு, தலைப்பாரம், தலைவலி ஆகியவற்றுக்கு உடனடி நிவாரணம்.

**D'cold** சுகமான வாழ்வுக்கு... சந்தைப்படுத்துவோர் PHARMCO MARKETING SERVICES (PVT) LTD.

(C/22657)

# இயல்பு நிலையைச் சீர்குலைக்கும் திட்டமே

# செம்மணன், தயாளன் மீதான தாக்குதல்!

## வேலணை சம்பவத்தை கண்டிக்கிறது தீவக மக்கள் நலன் காப்பகம்

யாழ்ப்பாணம்,ஜூன்24

**தீவகத்துக்கு நிராயுதபாணிகளாக அரசியற் பணிகளை மேற்கொள்ளச் சென்ற விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் செம்மணன் மற்றும் தயாளன் ஆகியோர் தாக்கப்பட்மை, இயல்பு நிலையைத் தோற்றுவிக்கும் முயற்சிகளுக்கு முட்டுக்கட்டை போடும் செயலாகும். இதனை நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம்.**

**- இவ்வாறு தீவக மக்கள் நலன் காப்பகம் என்ற அமைப்புத் தெரிவித்துள்ளது.**

வேலணை தாக்குதல் சம்பவம் தொடர்பாக தீவக மக்கள் நலன் காப்பகம் வெளியிட்ட அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

ஸ்ரீலங்கா ஜனநாயக சோஷலிச குடியரசின் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் தமிழ் மக்களின் ஏகப் பிரதிநிதிகள் என்று ஈழத் தமிழர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் வே.பிரபாகரன் அவர்களுக்கும் இடையே செய்துகொள்ளப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தமானது மக்களின் இயல்பு ரீதியான வாழ்வுரிமையை தோற்றுவிப்பதற்கு ஒரு மார்க்கமாக அமைந்தது. குறிப்பாக தமிழர் தாயகமான வடக்கு - கிழக்கு பிரதேச மக்களால் எதிர்பார்க்கப்பட்ட இயல்பு வாழ்க்கை கனிந்து வரும் வேளையில் அதற்கு மாறாக தீவகப் பிரதேசத்தில் வாழும் மக்களுக்கு அத்தகையதோர் இயல்பு நிலை தோன்றவிடாது பல்வேறு முட்டுக்கட்டைகளைப் போட்டு தீவக மக்களுக்கு மனப்பீதியை ஏற்படுத்திய வண்ணம் இருந்த கடற்படையினர் புரிந்துணர்வு ஒப்பந்தத்தை மதிக்காது அதற்கு எதிராக தமது அடாவடித்தனங்களை கட்டவிழ்த்துக் கொண்டுள்ளனர். இது சர்வதேசம் அறிந்த விடயமாகும்.

தீவகப் பிரதேசத்துக்குள் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர்களை அரசியல் பணிக்காக அனுமதிக்காது இருந்தமை யுத்த நிறுத்த ஒப்பந்தத்தையே பாதிக்கும் அளவுக்குச் சென்றிருந்தது. இதனையடுத்து கண்காணிப்புக் குழுத் தலைவருக்கு இதுபற்றி பலமுறை தெரியப்படுத்தி அதன் பிரகாரம் கண்காணிப்புக் குழுத் தலைவர் ஊர்காவற்றுறைக்கு விஜயம் மேற்கொண்டு கடற்படைத் தளபதியுடன் பேசி தீவகத்திற்குள் செல்லும் புலி உறுப்பினர்களை மண்டைதீவு தவிர்ந்த ஏனைய பகுதிக்குச் செல்லலாம் என்ற நிலையை ஏற்படுத்தினார்.

இதன் பிரகாரம் தமிழீழ விடுதலைப் புலி உறுப்பினர்கள் அரசியற் பணிக்காக தீவகம் சென்றபோது கடற்படையினர் தேவையற்ற கெடுபிடிகளையும் ஆத்திரமூட்டும் மிலேச்சத்தனமான நடவடிக்கைகளையும் மேற்கொண்டனர். அதுமாத்திரமன்றி பொதுமக்களையும் அச்சுறுத்தும் வகையில் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டனர். தம்மேல் செலுத்தப்படும் ஆத்திரமூட்டும் கெடுபிடிகளை மீறி அதற்கும் மேலாக தமது உறவுகளை எழுச்சியுடன் உவகை மேலிட கட்டியணைத்து வரவேற்று சகல இடங்களுக்கும் கூட்டிச் சென்றனர் தீவக மக்கள். இறுதியாக வேலணைத் துறையூரில் அலையெனத் திரண்ட மக்கள் வெள்ளத்திலே தமது உணர்வுடன் சங்கமித்த உறவுகளிடம் உரையாடி மகிழ்ந்தனர்.

இதனைப் பொறுக்காத ஈ.பி.டி.பி. யினரும் கடற்படையினரும் அரசியல்துறை தீவகப் பொறுப்பாளர் செம்மணன் மற்றும் தயாளன் ஆகிய இருவரும் புரிந்துணர்வு ஒப்பந்தத்தை மதித்து சீருடை, ஆயுதமின்றி நிராயுதபாணியாக மக்களுடன் அளவளாவி அரசியல் பணியை மேற்கொண்ட வேளை தாக்கிக் கொலை முயற்சியில் ஈடுபட்டமை மிலேச்சத்தனமான, மிருகத்தனமான நடவடிக்கை ஆகும்.

பொதுமக்கள் திரண்டு எழுந்து தடுத்திராவிடில் செம்மணன் சயனைட் அருந்தி தங்கள் இலட்சியப் பாதையில் மரணித்திருப்பார். இதன் மூலம் யுத்தநிறுத்தம் முறிவடைந்திருக்கும். இதனால் மிகப் பாரதூரமான விளைவுகள் ஏற்பட்டிருக்கும். தீவக மக்களாகிய நாம் எவ்விலை கொடுத்து ஆயினும் சமாதானத்தைப் பெற விரும்புகிறோம். இதில் நாம் திடமாகவுள்ளோம்.

இந்த அடாவடித்தனம் முதல் முறையல்ல பல்வேறு முறை நடைபெற்றுள்ளது. இதனை சர்வதேசம் அறியும். இவ்வாறான அடாவடித்தனங்களை இனிமேலும் நடைபெற விடாது கட்டிக் காத்து மக்களின் இயல்பு நிலையைப் பேணவேண்டியது அரசின் தலையாய கடமையாகும் என்பதைக் கூறும் அதேவேளை தீவக மக்கள் நலன் காப்பகத்தினராகிய நாம் இதனை மிகவும் வன்மையாகக் கண்டிக்கின்றோம் (ஓ)

## ஏ-9 கண்டி வீதியில்

## விபத்துக்களைத் தடுக்க காவல்துறை நடவடிக்கை

கிளிநொச்சி,ஜூன்24

யாழ். - கண்டி வீதியில் தற்போது வாகனப் போக்குவரத்து அதிகரித்துள்ளதைத் தொடர்ந்து வீதி விபத்துக்களைத் தடுப்பதற்காக கிளிநொச்சிப் பகுதியில் தமிழீழ காவல்துறையினர் வீதிக் கண்காணிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

வீதி ஒழுங்கு விதிமுறைகளை கண்காணிக்கும் பணியில் கிளிநொச்சிப் பகுதிக் காவல்துறையினர் ஈடுபட்டுள்ளதைக் காணமுடிகிறது. இந்த வீதியூடாக வவுனியாவில் இருந்து யாழ்ப்பாணத்துக்கும் யாழில் இருந்து வவுனியாவுக்கும் பெரும் எண்ணிக்கையில் பயணிக்கும் வாகனங்கள் அதிவேகமாகச் செல்வதால் வீதி விபத்துக்கள் நடப்பதுடன் பாதசாரிகளுக்கும் பல அசௌகரியங்கள் ஏற்படுகின்றன.

இவற்றைக் கவனத்தில் எடுத்து யாழ். - கண்டி வீதியில் செல்லும் வாகனங்களுக்கு வேகக் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன.

வேகக் கட்டுப்பாட்டுகளை மீறி அதிவேகமாகச் செல்லும் வாகனங்களை இடைமறித்து அந்த இடத்திலேயே தண்டப் பணம் அறிவிடப்படும் எனத் தமிழீழ காவல்துறையினர் அறிவித்துள்ளதாகக் கூறப்படுகிறது.

இதேசமயம், முகமாலைக்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடைப்பட்ட கண்டி வீதிப் பகுதியில் பாடசாலைகள், அலுவலகங்கள் மற்றும் குடியிருப்புகள் அமைந்துள்ளதால், அவ்வீதியில் சனநடமாட்டம் அதிகமாக உள்ளது. ஆயினும், அவ்வீதியில் பயணிக்கும் வாகனங்கள் உச்ச வேகத்தில் செல்வதைக் காணமுடிகிறது. இந்த வாகனங்களின் வேகத்தைக் கட்டுப்படுத்த பொலீஸார் நடவடிக்கை எடுக்காவிட்டால் மோசமான விபத்துக்கள் ஏற்படச் சாத்தியம் உள்ளதாக மக்கள் அச்சம் வெளியிட்டுள்ளனர். (ஓ-6-117)

## தபாலில் சேர்த்த 2 நாள்களில் வடக்குக்கு கடிதம் விநியோகம்

### சேவையை விரைவுபடுத்த நடவடிக்கை

யாழ்ப்பாணம்,ஜூன்24

வடக்குக்கான தபால் பரிமாற்றத்தை விரைவுபடுத்த லொறி ஒன்று சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக அஞ்சல்துறை வட்டாரங்கள் தெரிவித்தன. இதனால் தபாலில் சேர்க்கப்பட்ட இரு நாள்களுக்குள் கடிதம் உரிய முகவரியில் சேர்க்கப்படக் கூடியதாக இருக்கும் என்றும் கூறப்படுகிறது.

கடந்த 17ஆம் திகதிமுதல் தரைவழி ஊடாக தபால் பொதிகள் பரிமாறத் தொடங்கிய நிலையில் ஒன்றுவிட்ட ஒரு நாள்களில் தபால்கள் உரிய இடங்களுக்குக் கொண்டு சென்று சேர்ப்பிக்கப்படுகின்றன.

இதற்கென லொறி ஒன்று சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளது. இந்த லொறி யாழ்ப்பாணத்திலிருந்து தபால் பொதிகளை ஏற்றிக் கொண்டு சென்று கிளிநொச்சி, மாங்குளம் முதலான தபாலகங்களில் வன்னிக்குரிய தபால்களைக் கொடுத்துவிட்டு வவுனியாவிற்குச் சென்று ஏனைய தபால் பொதிகளை அங்கு ஒப்படைத்துவிட்டு வேறு மாவட்டங்களில் இருந்து வவுனியா தபாலகத்தில் சேகரிக்கப்பட்ட வடபகுதிக்கான தபால்பொதிகளை ஏற்றிக் கொண்டு மறுநாள் அதே ஒழுங்கில் யாழ்ப்பாணத்திற்கு வந்து சேரும்.

இதன்மூலம் இருநாள்களுக்குள் தபால் பரிமாற்றங்கள் இடம்பெறக் கூடியதாக இருக்கும் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (ஓ-12)

## பாடசாலைக்கு காணி கொள்வனவு

காரைநகர்,ஜூன்24

காரைநகர் வியாவில் சைவ வித்தியாலயத்திற்கு 10 பரப்புக் காணி கொள்வனவு செய்யப்பட்டுள்ளது. விளையாட்டு மைதானத்திற்காகக் கொள்வனவு செய்யப்பட்ட மேற்படி காணி பாடசாலை அதிபரிடம் சட்டபூர்வமாகக் கையளிக்கப்பட்டுள்ளது.

செப்பனிடப்படும் இம்மைதானத்தில் வருடாந்த மெய்வன்மைப் போட்டிகள் நடைபெறும் என அதிபர் தெரிவித்துள்ளார். (ஓ-13-73)

## படைகளின் சீரமைப்புக் குறித்து ஆராய 3 குழுக்கள் அமைப்பு

### பாதுகாப்பு அமைச்சர் தகவல்

கொழும்பு,ஜூன்24

ஆயுதப் படைகளைப் பலப்படுத்துவதற்கான சிபாரிசுகளை உருவாக்குவதற்காக மூன்று குழுக்கள் அடுத்தவாரத்தில் அமைக்கப்படவுள்ளன.

இவ்வாறு பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன தெரிவித்தார்.

தியத்தலாவையில் விமானப் படை புதிய ஆளணியின் அணிவகுப்பு மரியாதையை ஏற்று நிகழ்த்திய உரையிலேயே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

இராணுவம், கடற்படை, விமானப் படை ஆகியவற்றில் காணப்படும் பலவீனங்கள் மற்றும் ஒழுங்கீனங்கள் ஆகியவற்றை மேற்படி குழுக்கள் இனங்காணுமென்றும் -

அத்தகைய குறைபாடுகளைச் சீர்படுத்துவது தொடர்பான சிபார்சு அறிக்கைகளை அக்குழுக்கள் சமர்ப்பிக்குமென்றும் -

அமைச்சர் மாரப்பன மேலும் குறிப்பிட்டார்.

சிவில் மற்றும் ஆயுதப் படைகளின் ஓய்வுபெற்ற அதிகாரிகளை, படைகளின் ஆளணித் தெரிவு, பதவி உயர்வு, முக்கிய பதவிகளுக்குப் பொருத்தமானவர்களை அமர்த்துவது ஆகிய நடவடிக்கைகளில் ஈடுபடுத்துவது குறித்தும் இந்தக் குழுக்கள் ஆராயவுள்ளதாக அமைச்சர் கூறினார்.

பதவியுயர்வுக்கான விதிகள் மீளாய்வு செய்யப்பட்டு, பணிமூப்பு அடிப்படையில் அல்லாது திறமைகள் மற்றும் விசேட தகுதிகளின் அடிப்படையில் பதவியுயர்வுகள் வழங்கவும் ஆலோசிக்கப்படுமென அமைச்சர் குறிப்பிட்டார்.

தற்போதைய அமைதிச் சூழல் நிலவும் காலத்தில் முப்படைகளின் நிலை, ஆளணி அளவு மற்றும் செயற்பாடுகள் தொடர்பாகவும் இக்குழுக்கள் சிபாரிசுகளை வகுக்க உள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (ஓ)

## 29 மற்றும் 30ஆம் திகதிகளில் பதவி உயர்வுப் பரீட்சைகள்

### வேம்படி மகளிர் கல்லூரியில்

யாழ்ப்பாணம்,ஜூன்24

அரச திணைக்களங்கள் மற்றும் அலுவலகங்கள் ஆகியவற்றில் பணியாற்றும் உத்தியோகத்தர்களுக்கான பதவியுயர்வுப் பரீட்சைகள் எதிர்வரும் 29ஆம், 30ஆம் திகதிகளில் வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளன.

நடைபெறவுள்ள பரீட்சைகள் பற்றிய விவரங்கள் வருமாறு:-

ஜூன் 29ஆம் திகதி சனிக்கிழமை -

★ அரசாங்கப் பொது எழுதுநர் சேவையின் தரம் 2 'அ'விலிருந்து தரம் 1க்குப் பதவியுயர்வு செய்வதற்கான பரீட்சை.

★ அரசாங்க தட்டெழுத்தாளர் சேவையின் தரம் 2 'அ'விலிருந்து தரம் 1க்குப் பதவியுயர்வு செய்வதற்கான பரீட்சை.

30ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை-

★ அரசாங்க கணக்காய்வு அத்தியட்சகர் தரம் 1க்கான பதவியுயர்வுப் பரீட்சை.

மேற்படி பரீட்சைகளில் தோற்றவுள்ளோருக்கான அனுமதி அட்டைகள் தபாலில் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக யாழ்.கல்வி வலய வட்டாரங்கள் தெரிவித்தன. (ஓ-10)

## யாழ்.ஆஸ்பத்திரியில் தனியார் பணிச்சேவை

யாழ்.போதனா வைத்தியசாலையில் தற்போது நிகழும் பணியாளர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யுமுகமாக, யாழ்.போதனா வைத்தியசாலை அபிவிருத்திச் சங்கம், தனியார் பணியாளர் சேவை ஒன்றை நடத்தத் தீர்மானித்துள்ளது.

இத்தீர்மானத்திற்கமைய முதற்கட்டமாக வைத்தியசாலை சத்திர சிகிச்சைக் கூடத்தில் நிலவும் பணியாளர்கள் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யும் நோக்கில் ஜி.சீ.ஈ. உயர்தரம் படித்தவர்களிடமிருந்து பணியாளர்களுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

ஏனைய பகுதிகளுக்கும் இது பின்பு படிப்படியாக விஸ்தரிக்கப்படவுள்ளதாகக் கூறப்படுகிறது. (ஓ)

### பாதுகாப்பு வலயத்துக்குள் இருந்து

## கிறீஸ் திருடி விற்றவர்களின் பிணை மனுக்கள் நிராகரிப்பு

வலி.வடக்கு,ஜூன்24

அதிஉயர் பாதுகாப்பு வலயமான காங்கேசன்துறையில் இருந்து சட்டவிரோதமாக உராய்வு நீக்கி (கிறீஸ்) பரல்கள் ஐந்தைக் கடத்தி வந்து விற்பனை செய்ததாகக் குற்றம்சாட்டப்பட்டு தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளவர்களை பிணையில் விடக்கோரி சமர்ப்பிக்கப்பட்ட பிணை மனுக்கள் மல்லாகம் மாவட்ட நீதிபதி பா.சுப்பிரமணியத்தினால் நிராகரிக்கப்பட்டுள்ளன.

சந்தேகத்தின் பேரில் தடுத்து வைக்கப்பட்டுள்ள நான்கு பொலீஸாரையும் ஒரு பொதுமகனையும் பிணையில் விடும்படி கோரி சட்டத்தரணிகள் க.அரியநாயகம், பொன். பூலோகசிங்கம், பொன்.சுந்தரலிங்கம் ஆகியோர் பொலீஸார் சார்பிலும் பொதுமகன் சார்பில் மு.சபாநாதனும் பிணை மனுக்களைச் சமர்ப்பித்தனர். இந்த மனுக்களை நிராகரித்த நீதிவான் சந்தேக நபர்களை அடுத்த மாதம் 5ஆம் திகதி வரை தடுப்புக் காவலில் வைக்கும்படி பணித்துள்ளார். (ஓ-ரி)

## சைக்கிள்களுக்கு இலக்கத் தகடுகள்

வலி.வடக்கு,ஜூன்24

வலிகாமம் தெற்கு பிரதேச சபையினால் இவ்வாண்டுக்கான சைக்கிள் இலக்கத்தகடுகள் வழங்கப்பட்டு வருகின்றன.

வீதிச் சோதனைகளை நடத்தி இவ்வாண்டுக்கான இலக்கத் தகடுகள் பெறாத சைக்கிள்களுக்கு அந்த இடத்திலேயே வைத்து இலக்கத் தகடுகள் விநியோகம் செய்யப்பட்டு வருகின்றன. (ஓ-86)

# தமிழரின் சுயநிர்ணய உரிமையை உலகம் இன்று அங்கீகரிக்கும் நிலை

## இது மகிழ்ச்சியானது என்கிறார் ஆசிரியர்சங்கத் தலைவர்

வலிகாமம் தெற்கு,ஜூன்24

"1978ஆம் ஆண்டு காலியில் நடைபெற்ற இலங்கை ஆசிரியசங்க வருடாந்த மகாநாட்டில் தமிழ் மக்களுக்கு சுயநிர்ணய உரிமை உண்டு என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அந்தத் தீர்மானத்தை தென்னிலங்கை வாசிகளும், சர்வதேச அரசுகளும் அங்கீகரிக்கும் நிலை ஏற்பட்டு வருவது மகிழ்சிக்குரியது."

இலங்கை ஆசிரிய சங்கத்தின் வடபிரதேச யாழ்ப்பாண மாவட்டக் கிளையின் வருடாந்தக் கூட்டத்தில் உரையாற்றிய இலங்கை ஆசிரியர் தாய்ச் சங்கத் தலைவர் பேர்ட்டி கிரணவீர மேற்கண்டவாறு கூறினார்.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மண்டபத்தில் சமீபத்தில் இடம்பெற்ற இக்கூட்டத்துக்கு வடபிரதேச யாழ்ப்பாண மாவட்ட கிளைத்தலைவர் சா.தயாகலிங்கம் தலைமை வகித்தார்.

பேர்ட்டி கிரணவீர மேலும் கூறுகையில்:-

'இலங்கையில் நிலவும் இனப்பிரச்சினைக்கு யுத்தம் மூலம் ஒரு போதும் தீர்வுகாணமுடியாது. பேச்சுவார்த்தைக்கு வசதியாக விடுதலைப் புலிகள் மீதான தடையை அரசு உடனடியாக நீக்கவேண்டும். காலத்தை இழுத்தடிக்காமல் அரசு - விடுதலைப் புலிகள் சமாதானப் பேச்சுக்கள் ஆரம்பிக்கப்படவேண்டும். தமிழ் - சிங்கள இனங்களுக்கிடையிலான சமாதானம் மலர்ந்து ஆசிரியர்களுக்கிடையிலான ஐக்கியம் வலுப்பெற வேண்டும்' - என்றார் அவர்.

யாழ்.மாவட்ட கிளைத் தலைவர் சா.தியாகலிங்கம் தமது தலைமையுரையில்:-

'1914 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட யாழ்ப்பாண ஆசிரியர் சங்கம் தொழிற்சங்க ஒருமைப்பாட்டை நோக்கமாகக் கொண்டு பல அமைப்புக்களுடன் நெருங்கிய உறவுகளை வளர்த்துச் செயற்படுகிறது. பல்வேறு பிரச்சினைகளுக்கு மத்தியிலும் நாம் ஆசிரியர்களின் பிரச்சினைகளை தீர்ப்பதில் சகல மட்டங்களிலும் நடவடிக்கைகள் எடுத்து வருகிறோம்' என்றார்.

மேற்படி கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட பல்வேறு தீர்மானங்களுள் குறிப்பிடக்கூடிய சில தீர்மானங்கள் வருமாறு:-

ஆசிரிய சேவை வகுப்பு ஒன்றுக்கு செல்வதற்கான 50 வயது தடை நீக்கப்பட்டு, 20 புள்ளிகள் பெற்றவர்கள் உள்ளீர்க்கப்பட வேண்டும்.

அதிபர் சேவையில் இருப்பது போல அதி உயர்சேவைத் தரம் (SUPPER GRADE) ஆசிரிய சேவைக்கும் வழங்கப்படவேண்டும்.

போரால் பாதிக்கப்பட்டு அங்கவீனமடைந்த பிள்ளைகளுக்கு கல்வி புகட்ட மகரகம ஆசிரிய பயிற்சிக் கல்லூரியில் உள்ளது போன்ற விசேட கல்வி ஆசிரிய பயிற்சி நெறியைத் தேசிய கல்விக் கல்லூரியில் ஆரம்பிக்க வேண்டும்.

தமிழ்மொழி மூல பாடசாலைகளில் தமிழ்மொழி பேசும் அதிபர்களையே நியமிக்க வேண்டும்.

அதிபர், ஆசிரியர் நியமன போட்டிப் பரீட்சைக்கான விண்ணப்பங்கள் கோரப்படும்போது முன்னர் நடைபெற்ற போட்டிப் பரீட்சையின் புள்ளிகள் கருத்தில் எடுக்கப்பட வேண்டும். (ஒ-152)

### கசிப்பு வழக்கில் 35ஆயிரம் ரூபா அபராதம்

வலிவடக்கு,ஜூன்24

ஐம்பது போத்தல்கள் கசிப்பு வைத்திருந்த குற்றச்சாட்டின் பேரில் கைதான நபர் குற்றத்தை ஒப்புக்கொண்டதைத் தொடர்ந்து அவருக்கு 35ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

அச்சுவேலி பொலஸாரால் கைது செய்யப்பட்டு மல்லாகம் மாவட்ட நீதிபதி பா.சுப்பிரமணியம் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்ட புத்தூர் நவக்கிரியைச் சேர்ந்த இராசன் கந்தசாமி என்பவருக்கே இந்த அபராதம் விதிக்கப்பட்டது.

மேற்படி ரூபா 15ஆயிரம் ரூபாவை உடன் செலுத்தியதுடன், மிகுதித் தொகையை கட்டத் தவணை கேட்ட போது மன்று ஏற்கக் கூடிய ஒருவரின ஆள் பிணையில் அவரைச் செல்ல நீதிமன்றம் அனுமதித்தது. (ஒ-8)

### நூல் அறிமுக விழா

யாழ்ப்பாணம்,ஜூன்24

இலக்கிய கலாநிதி பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை எழுதிய 'கம்பராமாயணக் காட்சிகள் இரண்டாம் பாகம்' நூலின் அறிமுக விழா எதிர்வரும் 30 ஆம் திகதி காலை வண்ணை நாவலர் மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

பண்டித மணியின் 103 ஆவது பிறந்த தினத்தையொட்டி பண்டிதமணி நூல் வெளியீட்டுச் சபையின் ஏற்பாட்டில் நடைபெறும் இவ்விழாவில் கோப்பாய் ஆசிரிய கலாசாலை விரிவுரையாளர் பண்டிதர் செ.திருநாவுக்கரசு நினைவுச் சொற்பொழிவினை நிகழ்த்தவுள்ளார். (ஒ-ரி)

### பளை வயல்களில் மிதிவெடி அபாயம்!

வடமராட்சி கிழக்கு,ஜூன்24

பளைப் பிரதேசத்தில் சுமார் 830 ஹெக்டயர் நெல் வயல்கள் யுத்தத்தினால் கடந்த இரு வருடங்களாக பயிர்ச்செய்கை இன்றிப் பாதிப்படைந்துள்ளன.

தற்போது பளைப் பிரதேசத்தில் மக்கள் படிப்படியாக மீளக்குடியேறி வருகின்றபோதிலும் அறத்தி அம்மன கோயிலடி, தம்பகாமம், புலோப்பளை ஆகிய இடங்களிலுள்ள வயல்களில் மிதிவெடி அச்சம் காரணமாக செல்ல முடியாதுள்ளதாக அதிகாரிகளுக்கு விவசாயிகள் முறையிட்டுள்ளனர். (ஒ-182)


**யாழ்.மாவட்ட கூட்டுறவு சபை (வ.து)**
**தலைவா/பொதுமுகாமையாளர் கலந்துரையாடல்**

காலம் : **25.06.2002 செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00 மணி.**
இடம் : யாழ்.கூட்டுறவாளர் வீரசிங்கம் மண்டபம்

மேற்படி கலந்துரையாடலில் சகல ப.நோ.கூ.சங்கங்களின தலைவர், பொதுமுகாமையாளர்களையும், சகல இரண்டாம் படிச் சங்கங்களின் தலைவர், பொதுமுகாமையாளர்களையும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றேன். -

பெ.கனகசபாபதி
தலைவர்
யாழ்.மாவட்ட கூட்டுறவுச் சபை.

(C/22676)


ஓம் விராட்விஸ்வப் பிரம்மனே நமஹ

## முதலாம் வருட நினைவஞ்சலி

மலர்வு 21 ◊ 11 ◊ 1929



உதிர்வு 05 ◊ 07 ◊ 2001

### அமரர் சின்னக்குட்டி இராசப்பு

*(ஓய்வுபெற்ற புகையிரத ஊழியர்)*
திதி: 24.06.2002

*பாசத்தின் சிகரமாய்த் திகழ்ந்த*
*அன்பின் திருவுருவே! எம்மையெல்லாம்*
*விட்டுப்பிரிந்து ஓராண்டு ஓடி மறைந்தாலும்*
*உங்கள் நினைவுகள் எம்மையெல்லாம்*
*அருந்துயரில் ஆழ்த்துகின்றன.*
*உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.*

*ராணி மில்,*
*நெல்லியாடி, கரவெட்டி.*

*பிரிவால் துயருறும்:*
மனைவி, பிள்ளைகள், பெறாமகன்.

(5159)


மீண்டும் யாழ்.நகரில்...

**நோபிள்**

**ஸ்கிறீன் பிறின்டேர்ஸ்**

பிற மாவட்டங்களில் பலரது நன்மதிப்பைப் பெற்று தனக்கென ஒரு தனியிடத்தைப் பிடித்துக்கொண்ட நோபிள் ஸ்கிறீன் பிறின்டேர்ஸ்
இன்று (24.06.2002) திங்கட்கிழமை முதல்

**யாழ்.GOPAL ARTS**

உடன் இணைந்து தமது சேவையை வழங்கவுள்ளார்கள் என்பதை அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் பெரு மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றார்கள்.

இல.04, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.

(5155)




இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரியின் பழைய மாணவர்களினால் வறுமைக்கோட்டுக்குக் கீழுள்ள குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களின் கல்வி நிதிக்காக 'வன்னியர்கள்' என்ற நாடகம் பம்பலப்பிட்டி கதிரேசன் மண்டபத்தில் மேடையேற்றப்பட்டது. அருண் றோய் பிரான்ஸிஸ் இயக்கிய அந்த நாடகத்தின் ஒரு காட்சி இது.

# பளைப் பாடசாலைகளுக்கு 'யுனிசெவ்' நிறுவனம் உதவி

பளைப் பிரதேசத்தில் மீள இயங்கவுள்ள பாடசாலைகளுக்குத் தேவையான தளபாடங்களையும், கற்பித்தல் உபகரணங்களையும் வழங்க கிளிநொச்சி மாவட்ட 'யுனிசெவ்' அலுவலகம் முன்வந்துள்ளது. அத்துடன் இப் பாடசாலைகளில் இணைந்துகொள்ளும மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களையும் வழங்கவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இப்பிரதேசத்தில் உள்ள 12 பாடசாலைகளின் கட்டடங்கள், தளபாடங்கள் மற்றும் கற்பித்தல் உபகரணங்கள் ஆகியவை யுத்த அனர்த்தங்களால் சேதமடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஒ-117)

## என்றுதான் விஜி முகத்தை இனிமேல் காண்போம்?



### மாணிக்கவாசகர் விஜயவர்மன் (விஜி)

*(உரிமையாளர், எக்ஸ்போ வீடியோ கொம்பிளக்ஸ்)*

அன்பிலே பழுத்து எம்மை அரவணைத்து
அவனியிலே வாழ்வாங்கு வாழ வைத்து
இன்ப மொழி புகன்றாய் இகத்தில் எம்மை
துன்பக் கடலுள் ஆழ்த்தி விட்டாய் விஜி அண்ணாவே!
நின்புத்தி மதியெல்லாம் கேட்டோம் அண்ணா!
நெஞ்சு வெடிக்குதண்ணா நின் பிரிவால்
என்றுதான் உங்கள் முகம் காணுவோமோ?
எங்குதான் எம்மை விட்டுப் பிரிந்து சென்றாய்?

*No.7, K.K.S. வீதி,*
*கோண்டாவில் மேற்கு, கோண்டாவில்.* (5160)

- EXPO ஊழியர்கள்.

## மரண அறிவித்தல்கள்

### திருமதி கமலினிதேவி பாலகணேசன்

கோப்பாய் மத்தியைச் சேர்ந்த திருமதி கமலினிதேவி பாலகணேசன் நேற்று(23.06.2002) ஞாயிற்றுக்கிழமை சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் பாலகணேசன் (New Vimaki) அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற பொன்னுத்துரை - தங்கமுத்து தம்பதிகளின் புதல்வியும் மானிப்பாய் செல்வரத்தினம் - மகேஸ்வரி தம்பதிகளின் மருமகளும் மாலினி (சப்பிரகமுவ பல்கலைக்கழக இறுதியாண்டு மாணவி), சுபேந்தினி ஆகியோரின் பாசமிகு தாயாரும் அருணாசலம் அவர்களின் மருமகளும் காலஞ்சென்ற நடேசப்பெருமான், காலஞ்சென்ற திலகவதி மற்றும் உருத்திராதேவி (ஆஸ்திரேலியா), பத்மினிதேவி (யாழ்.திருநெல்வேலி றோ.க.த.க.பாடசாலை), மங்கயர்க்கரசி (லண்டன்), பாக்கியலட்சுமி (ஜேர்மனி), சத்தியதேவி ஆகியோரின் பாசமிகு சகோதரியும் சுசீலாதேவி (கனடா), விக்கிரமசிங்கம், மனோகரன், ஸ்ரீகாந்தன், யோகேஸ்வரன், தர்மராசா (ஆசிரிய ஆலோசகர், தீவகம்) ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கோப்பாய் மத்தியிலுள்ள அவரது இல்லத்தில் இன்று (24.06.2002) திங்கட்கிழமை நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பகல் 10 மணியளவில் கோப்பாய் கந்தன்காடு மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பாலகணேசன்,
*கந்தசுவாமி கோயிலடி,*
*கோப்பாய் வடக்கு,*
*கோப்பாய்.*

தகவல்:
செ.பாலகணேசன் (கணவர்),
மாலினி, சுபேந்தினி } பிள்ளைகள்.

(சி-22675)

### திருமதி மேரி பற்றீசியா ரட்ணராஜா

*(இளைப்பாறிய ஆசிரியை, புனித ஜோண் பொஸ்கோ யாழ்ப்பாணம்)*

இருபாலை கிழக்கைச் சேர்ந்த திரு.**R.A**.ரட்ணராஜாவின் அன்பு மனைவி திருமதி மேரி பற்றீசியா ரட்ணராஜா நேற்று(23.06.2002) ஞாயிற்றுக் கிழமை கர்த்தருக்குள் நித்திரையாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற திரு.திருமதி குணரத்தினம் ஜோசப் ஆகியோரின் அன்பு மகளாவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று(24.06.2002) திங்கட்கிழமை காலை 9 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் நல்லடக்கத்திற்காக பரி கன்னி மரியாள் சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இருபாலை கிழக்கு,*
*கோப்பாய்.*

தகவல்:
(5156) **R.A**.ரட்ணராஜா (கணவர்).

# ஜனாதிபதியின் பலத்தைக் குறைப்பதைவிட தமிழருக்கு அதிகாரம் வழங்குவது முக்கியம்

## முதலில் அதிகாரப் பகிர்வு பின்பே அரசுக்கு ஆதரவு

பூ.ம.செல்லத்துரை

**1948**ஆம் ஆண்டு தொடக்கம் இற்றைவரை மூன்று அரசியல் திட்டங்கள் உருவாக்கப்பட்டன.

அவற்றில சுதந்திரத்துக்காக பிரிட்டனால் வழங்கப்பட்ட அரசியல் அமைப்பில் பெரும்பான்மையோர் கொண்டுவரும் சட்டங்கள் சிறுபான்மையோரை பாதிக்காமல் இருக்க 29ஆம் விதி உள்ளடக்கப்பட்டது. அந்த விதியை ஏட்டுச் சுரக்காய் ஆக்கிவிட்டு தமிழர் பிரதேசமான வடக்கு - கிழக்கில் திட்டமிட்டுச் சிங்களவர்களைக் குடியேற்றினர். தமிழர்களின் பூமியை மட்டுமல்ல ஆறு பிரதிநிதிகளையும் ஐ.தே.கட்சியினர் பறித்துக்கொண்டார்கள்.

1956ஆம் ஆண்டு சிறிலங்கா சுதந்திரக் கட்சி நிறுவுநர் எஸ்.டபிள்யூ. ஆர்.டி.பண்டாரநாயக்கா சிங்களம் மட்டும் சட்டத்தைக் கொண்டுவந்து நிறைவேற்றி சோல்பரி அரசியல் திட்டத்தின் சிறுபான்மையோர் பாதுகாப்புப் பிரிவை கேள்விக்குறியாக்கினார்.

**கோடீஸ்வரன் வழக்கு**

கோடீஸ்வரன் வழக்கின் மூலம் பிரிவுக் கவுன்ஸிலில் சில கேள்விகள் எழுப்பப்பட்டன. இதனால் சிங்களத் தலைமைகள் சோல்பரி அரசியல் அமைப்பை அகற்றி 1972இல் குடியரசு அரசியல் திட்டத்தைக் கொண்டு வந்தனர். இந்த நாடு சிங்கள, பௌத்த நாடு என மகுடம் சூட்டப்பட்டது.

சிறுபான்மையோரின் கொஞ்சநஞ்ச நம்பிக்கையையும் நாசமாக்கி - தலைமுழுகிய அரசியல் யாப்பு 1972ஆம் ஆண்டு சிறிமாவோ பண்டாரநாயக்காவின் அரசால் அறிமுகமாக்கப்பட்டது.

இந்த அரசியல் திட்டத்தால் பாதிக்கப்பட்ட சிறுபான்மையினர் அனைவரும் ஒன்றிணைந்து அந்த ஆட்சியை அகற்றி ஐ.தே.கவை ஆதரித்தார்கள்.

அந்தக்கட்சி 165 நாடாளுமன்றப் பிரதிநிதிகளைப் பெற்று அதாவது ஆறில் ஐந்து பெரும்பான்மையுடன் ஆட்சியமைத்தது.

அக்கட்சியினர் என்ன செய்தார்கள்? 'அரசியல் திட்டத்தை மாற்றுவோம்' என்றார்கள். அதற்காக சர்வதிகாரத்தையுடைய ஜனாதிபதி பதவியையும் விகிதாசார தேர்தல் முறையையும் இணைத்து ஓர் அரசியல் திட்டத்தைக் கொண்டுவந்து இனப்பிரச்சினையை இடியப்பச் சிக்கலாக்கினார்கள்.

**அரசியல் யாப்புகள்**

இரண்டு சிங்களப் பெரும்பான்மைக் கட்சிகளும் தங்கள் தங்கள் அதிகார பலத்தைத் தக்கவைக்கக்கூடிய வகையில் அரசியல் யாப்புகளைத் தயார் செய்தனர். இலங்கை வாழ் பல்லின மக்களைத் திருப்திப்படுத்த எந்த முயற்சியையும் எடுக்கவில்லை.

'சிறுபான்மை இனத்தவர்கள் தேர்தல் வரும்போதெல்லாம், அந்தக் கட்சியை எதிர்த்து இந்தக் கட்சிக்கும் - இந்தக் கட்சி பிழைசெய்யும் போது அந்தக் கட்சிக்கும் வாக்களித்தனர்.

'சங்கு தப்பினால் கணபதி' என்ற தத்துவத்தைக் காலம் முழுவதும் உறுதிப்படுத்தி வந்தனர். இன்று சங்கு தப்பிவிட்டது கணபதியும் தப்பிவிட்டது என்ற நிலையில் திரிசங்கு சொர்க்கத்தில் சிறுபான்மையோர் சிக்கிவிட்டார்கள்.

நோர்வேயே சரணம் என்று தவம் செய்யவேண்டிய நிலை.

இன்றிருக்கும் அரசியல் திட்டத்தைக் கொண்டு வந்தவர்கள் ஐ.தே. கட்சியினர். சர்வதிகாரம் கொண்ட ஜனாதிபதியை உருவாக்கியவர்களும் அந்த அதிகாரம் அனைத்தையும் அனுபவித்தவர்களும் அவர்களே.

இந்த அதிகாரங்களைக் குறைக்க வேண்டும் என்று எதிர்க்கட்சிகள் வாதாடிப்போராடிய போதெல்லாம் - எள்ளி நகையாடியவர்களும் ஐ.தே. கட்சியினர்தான்.

'வண்டியும் ஒருநாள் ஓடத்தில் ஏறும் ஓடமும் ஒருநாள் வண்டியில் ஏறும்' என்பதை மறந்து அன்று கொக்கரித்தார்கள்.

இன்று வண்டி ஓடத்தில் ஏறவேண்டிய நிலை வந்ததும் தடுமாறுகிறார்கள்.

இந்த அரசியல் திட்டங்களால் தமிழர் 54 வருடங்களாகக் கஷ்டத்திற்கு மேல் கஷ்டத்தையும் சோதனைக்கு மேல் சோதனைகளையும் அனுபவித்துவிட்டார்கள்.

65,000இற்கும் மேற்பட்ட உயிர்களையும் பலகோடி ரூபா உடைமைகளையும் இழந்து ஆறு லட்சத்துக்கும் மேற்பட்டோர் அகிலமெல்லாம் அகதிகளாக அலைந்து புலம்பெயர்ந்து உண்ண, உடுக்க, உறைவிடம் தேடி ஓடியுள்ளார்கள்.

சொந்த நாட்டில் சோத்துக்கில்லாது திண்டாடுகிறார்கள். இதற்குப் பரிகாரமாக அதிகாரத்தைப் பரவலாக்கி அல்லற்படும் தமிழருக்கு ஆறுதல் தேடாது தேர்தல் முடிந்து ஆட்சி அமைத்து ஆறு மாதம் முடியும் முன்பே உள்ளூராட்சித் தேர்தல் அதிகாரத்தையும் பெற்றுக்கொண்டனர்.

மீண்டும் தங்கள் அதிகார வெறியை ஸ்திரப்படுத்தவும், அரசியல் இருக்கையைத் திடப்படுத்தவும் ஜனாதிபதிக்கு உள்ள அதிகாரத்தைக் குறைக்கவும் சூட்டோடு சூடாக மசோதா கொண்டு வருகிறார்கள்.

இதனால் இலாபம் அடையப்போகிறவர்கள் ஆட்சியாளரும் இனிமேல் ஆட்சிக்கு வரும் சிங்களக் கட்சியினருமே ஒழிய சிறுபான்மையோரல்லர்.

**இனப்பிரச்சினை இழுத்தடிப்பு**

ஒரு வருடத்திற்குப் பின் ஆட்சியைக் கலைக்கும் ஜனாதிபதியின் அதிகாரத்தைக் குறைப்பதால் ஆட்சியாளர் தங்கள் அதிகாரத்தையும் ஆட்சியையும் பாதுகாக்கலாம். ஆனால் சிறுபான்மையோரின் இனப்பிரச்சினை இழுத்தடிக்கப்படும்.

ஆட்சிக் கலைப்பு ஆபத்து என்னும் லகானைச் சிறுபான்மையோர் கெட்டியாகப் பிடித்துக்கொண்டால் அதிலிருந்து தப்ப அரசு நடவடிக்கையெடுக்கவேண்டும்.

எஞ்சியுள்ள ஆறு மாதங்களுக்குள் இனப்பிரச்சினைத் தீர்வுக்கான சிறந்த ஒரு தீர்வு யோசனையை அரசு நாடாளுமன்றத்தில் நிறைவேற்ற வேண்டும்.

அதன் பின்னரே ஜனாதிபதியின் அதிகாரத்தைக் குறைக்கும் மசோதாவுக்கு சிறுபான்மையினர் ஆதரவு வழங்கமுடியும் என்று வலியுறுத்த வேண்டும்.

அரசியலில் சிறுபான்மையோர் தங்கள் கைக்குக் கிடைத்திருக்கும் இந்த அரிய சந்தர்ப்பத்தைக் கை நழுவவிடக்கூடாது.

இப்போது பந்து சிறுபான்மையோர் கையிலிருக்கிறது. ஐ.தே.கட்சியினர் குள்ளநரிச் செயலில் கெட்டிக்காரர்கள்.

டொனமூர் அரசியல் யாப்பு, சோல்பரி அரசியல் யாப்புகள் ஆகியவற்றில் சிறுபான்மை பிரதிநிதிகளை விலைகொடுத்து வாங்கியே நிறைவு செய்தவர்கள்.

03.08.2000ஆம் ஆண்டு பொது ஜன ஐக்கிய முன்னணி அரசு ஒற்றையாட்சித் திட்டத்தை மாற்றி பிரதேசங்களின் ஒன்றியமாக்கும் அரசியல் யோசனையைத் தெரிவித்தது.

ஒற்றையாட்சியை மாற்ற பல்லாண்டு காலம் போராடிய சிறுபான்மைக் கட்சிகள் இதற்கு எதிர்த்து வாக்களித்தன. அதற்குத் தூண்டியவர்கள் ஐ.தே.கட்சியினர் என்பது குறிப்பிடத்தக்கது.

**தனித் தமிழ்நாடு**

1976ஆம் ஆண்டு தனிநாடுதான் தமிழர்களுக்குச் சிறந்த வழி என்பதை காங்கேசன்துறையில் நடந்த இடைத்தேர்தலில் தந்தை செல்வா முன்வைத்து வெற்றிபெற்றார். நாடாளுமன்றம் சென்று நாடாளுமன்றத்தில் "ஐக்கிய இலங்கையில் இணைப்பாட்சி மூலம் தமிழருக்கு சுயாட்சி தர சிங்களவர் இணங்காவிடில் தனித் தமிழ் நாட்டைவிட தமிழருக்கு வேறு வழி கிடையாது" என்று கூறினார்.

1977ஆம் ஆண்டு வடக்கு - கிழக்கில் நடந்த பொதுத் தேர்தலில் தமிழருக்கு தனிநாடு வேண்டும் எனக் கேட்டு அனைத்துத் தொகுதிகளில் வெற்றி பெற்றுச் சென்ற கூட்டணியினர் எதிர்கட்சித் தலைமைப் பதவியைப் பெற்றனர்.

பின்னர் தனிநாடு கோரிக்கையைத் தலைமுழுகிவிட்டு மாவட்ட சபையை ஏற்றுக்கொண்டார்கள். எனவே தற்போது தமிழர்கள் மிகமிக விழிப்பாக இருக்கவேண்டும்.

இன்றைய ஆட்சியாளர் மக்களுக்களித்த வாக்குறுதி - சண்டையை நிறுத்தி - சமாதானத்தை நிலைநாட்டி இனப்பிரச்சினையைத் தீர்க்க இணக்கமான முடிவை எடுப்பது என்பதுதான்.

மக்கள் இதை நம்பி தங்கள் ஆணையை வழங்கினார்கள். ஆட்சி அமைத்துவிட்டார்கள்.

ஆட்சி அமைத்த கையோடு உள்ளூராட்சித் தேர்தலையும் நடத்தி, வெற்றிபெற்று தமது அரசியல் இருக்கையை ஸ்திரப்படுத்திக்கொண்டார்கள்.

இனி ஆட்சியாளர் என்ன செய்ய வேண்டும்? இனப்பிரச்சினையைத் தீர்க்க நடவடிக்கை எடுக்கவேண்டும். இதற்கு இரு கட்சிகளினதும் ஒத்துழைப்பு அவசியம் தேவை.

**அரசியல் அநாகரிகம்**

இதைப் பெறுவதற்கு அரசு முனைப்புக் காட்டவில்லை. மாறாக எதிர்க்கட்சியை சிண்டுமுடித்துவிடுகிறது.

இது இலங்கையின் அரசியல் வரலாற்றில் அழிக்கமுடியாத இடத்தைப் பிடித்திருக்கும் அரசியல் அநாகரிகமாகும். வெற்றி பெற்ற கட்சி தோல்வி கண்ட கட்சியின் ஆட்சியைப் பற்றிக் குறைகூறுவதும் சேற்றை வாரி இறைப்பதும் இரண்டு கட்சிகளும் மாறிமாறிச் செய்யும் அரசியல் கோமாளித்தனங்களாகும்.

ஆனால் இது இன்றைக்கு முக்கியமல்ல. இன்றைய தேவை இனப்பிரச்சினையைத் தீர்ப்பதாகும்.

இதற்கு இரண்டு கட்சிகளின் பூரண ஒத்துழைப்பும் அவசியம் தேவை.

ஆகவே, அரசு, எதிர்க்கட்சியுடன் நடத்தும் கட்சி மோதல்களை உடனே நிறுத்தி பரஸ்பர ஒத்துழைப்புடன் இனப்பிரச்சினைக்கு இணக்கமான தீர்வைக் காண முன்வரவேண்டும்.

இதைவிடுத்து ஆளும் கட்சி தொடர்ந்து எதிர்க்கட்சியைச் சீண்டிக்கொண்டிருக்குமேயானால் அது சமாதானத் தீர்வை சாகடிக்கும் சகாஸமாகத் தமிழரை ஏமாற்றச் செய்யும் முயற்சியாகவும்தான் இருக்கும். அரசியல் ஆய்வாளர்களின் கருத்தும் இதுவாகும்.

ஆளும் கட்சி இனப்பிரச்சினைக்கு சரியான தீர்வை - நாடாளுமன்றத்தில் நிறைவேற்றும்வரை தமிழர் ஜனாதிபதியின் அதிகாரக் குறைப்புக்கு இணங்கக்கூடாது, ஆதரிக்கக் கூடாது. நடுநிலை தவறக்கூடாது.

முதலில் அதிகாரப் பரவலாக்கலை நிறைவுசெய்தபின்பே ஜனாதிபதியின் அதிகாரக் குறைப்புப் பற்றி ஆலோசிக்க வேண்டும்.

முதலில் அதிகாரப் பகிர்வு அதன் பின்பே ஜனாதிபதியின் அதிகாரக் குறைப்புக்கு சிறுபான்மையோர் அங்கீகாரம் வழங்கவேண்டும்.

*நன்றி : சுடர்ஒளி*

---

# உடன்படிக்கை நிறைவேற மக்கள் வற்புறுத்த வேண்டும்

## புலிகளின் மூத்த உறுப்பினர் தெரிவிப்பு

கோப்பாய்,ஜூன்24

புரிந்துணர்வு உடன்படிக்கை முழுமையாக நிறைவேற்றப்படாவிட்டால் மக்கள்தான் அதனை நிறைவேற்ற போராட்டங்கள் மூலம் அரசை வற்புறுத்த வேண்டும். இவ்வாறு தெரிவித்தார் விடுதலைப் புலிகளின் சிரேஷ்ட உறுப்பினர் அரசண்ணா.

அண்மையில் கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியில் நடந்த கலந்துரையாடல் ஒன்றின்போதே அரசண்ணா இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறுகையில்-

புலிகளின் பலம் மக்கள் பலம். அந்தப் பலத்தை இல்லாமல் செய்வதற்கு பல்வேறுபட்ட தரப்புகளிலிருந்தும் தவறான மற்றும் விஷமத்தனமான பிரசாரங்கள் மேற்கொள்ளப்பட்டு வருவதை அவதானிக்க முடிகிறது.

மக்கள் போராட்ட யதார்த்தத்தை உணர்ந்து தேசியத்தை வலியுறுத்தி ஒற்றுமையாக ஒன்றிணைந்து பாடுபடவேண்டும். இதன்மூலமே எமது அபிலாஷைகளை வென்றெடுக்கலாம்.

தேர்தல் காலங்களின்போது 3 வேறுபட்ட நிலைப்பாடுகளில் பிரசாரம் நடந்தது. புலிகள் அழிப்பு என ஜே.வி.பியும், யுத்தம் மூலம் சமாதானம் என பொதுஜன ஐக்கிய முன்னணியும், பேச்சுமூலமே தீர்வு என ஐக்கிய தேசிய முன்னணியும் பிரசாரம் செய்தன.

மக்கள் தமக்குத் தேவையானதை தெரிந்தெடுத்து அதற்கேற்ற வகையில் சமாதான முன்னெடுப்பும் நிகழ்ந்தபோதும் இன்று அதன் உத்வேகம் படிப்படியாகக் குறைவடைந்து வருவது போல் தோன்றுகிறது.

ஆனால் இன்று அரசுகூட ஒரு முக்கிய பிரச்சினையில் அதாவது நிதிப் பற்றாக்குறையில் சிக்கித் தவிக்கிறது. உதவி வழங்கும் நாடுகள் சமாதானம் ஏற்பட்டால்தான் நிதி உதவி வழங்கப்படும் என கூறிவிட்டன. எனவே யுத்தம் தொடர்ந்து நடைபெறுவதற்கான சாத்தியம் தற்போது குறைவாகவே தென்படுகிறது.

கடந்த காலங்களில் ஒப்பந்தங்களுக்கு ஏற்பட்ட கதி தற்போதைய ஒப்பந்தத்திற்கு ஏற்பட வழி ஏற்படாது என்றே நம்புகிறோம். - என்றார் அரசண்ணா.

(ஒ-72)

---

# தென்மராட்சி கிழக்கு புனரமைப்பு பிரிட்டிஷ் தூதரிடம் கோரிக்கை!

யாழ்ப்பாணம்,ஜூன்24

தென்மராட்சி கிழக்கிலிருந்து இடம்பெயர்ந்த மக்களின் எதிர்கால வாழ்வை உறுதிப்படுத்தும் விதத்திலான கோரிக்கை மனு ஒன்றை இலங்கைக்கான பிரிட்டிஷ் தூதரிடம் சாவகச்சேரி பாரதி சனசமூக நிலையம் சமர்ப்பித்துள்ளது.

கடிதம் மூலம் அனுப்பப்பட்ட அந்தக் கோரிக்கை மனுவில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

இடம்பெயர்ந்து அல்லற்படும் அறுகுவெளி, தனங்களப்பு, மறவன்புலோ, கைதடி, நாவற்குழி, கோயிலாக்கண்டி, தச்சன்தோப்பு மக்களின் எதிர்கால வாழ்வுக்காக இந்தக் கோரிக்கை மனுவை தங்களுக்கு அனுப்புகின்றோம்.

எதிர்வரும் முதலாம், 2ஆம் திகதிகளில் இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் கூட்டம் கொழும்பில் நடைபெறவுள்ளதாலும் தங்களது நாடும், உதவும் பிரதான நாடு என்பதாலும் அன்றைய கூட்டத்தில் எமது பிரிவு மீள் குடியேற்றம், புனர்வாழ்வு, புனரமைப்பு, நஷ்டஈடு வழங்கல் ஆகியவை சம்பந்தமான கோரிக்கைகளை தங்களுக்கூடாக சமர்ப்பிக்க விரும்புகின்றோம்.

வடக்கு - கிழக்கில் போர் அழிவு கூடியது எமது பிரிவாகும். இதனை புனரமைத்துத் தருகின்ற பொறுப்பு தங்களுடைய நாட்டிடம் விடப்படுகிறது. இப்புனரமைப்பின்போது தாங்கள் பின்வரும் விடயத்தை கவனித்து செயற்படுத்தவேண்டும்.

இடம்பெயர்ந்த எமது பிரிவு மக்களுக்கு பண உதவி சிங்கள, முஸலீம் மக்களுக்கு வழங்கப்படும் தொகைக்கு சமமாக இருத்தல்வேண்டும்.

இடம்பெயர்ந்திருப்பின் திருமணமான சிங்கள அல்லது முஸ்லிம் தம்பதிகளுக்கு வழங்கப்படும் அதே தொகை எமது பிரிவு தம்பதியினருக்கும் வழங்கல்.

அழிவுக்குள்ளான 2500 ஏக்கர் நெல் உற்பத்தியாளருக்கு உரிய நஷ்டஈடு வழங்கல்.

4 பாடசாலைகள் மீள இயங்க சகல உதவிகளையும் வழங்கல்.

100 குளங்களையும் தொடர்புபடுத்தி விவசாயத்தை ஊக்குவித்தல்.

5 கால்நடைப் பண்ணைகள், 40 பழமரப் பண்ணைகள் உருவாக்கி வேலைவாய்ப்புக்கு வழிசெய்தல்.

அழிக்கப்பட்ட ஆலயங்களுக்கு தேவைக்கேற்ப நிதி வழங்கல்.

மறவன்புலோ மத்தியில் ரூபா 2 கோடி செலவில் புதிய வீடுகள் அமைத்தல்.

மின்சாரம், குடிதண்ணீர் வசதிகள், வீதி தெருக்கள் செப்பனிடல்.

மலசலகூட வசதிகள் ஏற்படுத்தல்.

மறவன்புலோ கிராமிய சுகாதார நிலையத்தைத் தரமுயர்த்தல்.

பொதுத் தாபனங்கள் புனரமைத்தல், உரிய தளபாட வசதிகள் ஏற்படுத்தல்.

இவற்றுக்கு நிதி வழங்கி எமது பிரதேசத்தை மீள்குடியேற்றம் செய்து தரகோருகின்றோம். தாங்கள் இதனை இலங்கைக்கான உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்தில் சமர்ப்பித்து நிதி ஒதுக்கீடு செய்ய உதவும்படி கோருகின்றோம் - என்று அதில் உள்ளது.

இந்தக் கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்கான திட்ட மதிப்பீடும் தூதரிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஒ)

---

# அதிபர் மற்றும் ஆசிரியர்களுக்கான சம்பள நிலுவை வழங்கப்படுகிறது

கடந்த வருடம் நடைபெற்ற பாடசாலை ஆசிரியர்கள், அதிபர்கள் சேவைத் தரங்களில் பதவி உயர்வுடன் உள்ளீர்ப்பு செய்யப்பட்டவர்களின் சம்பள நிலுவைத் தொகையின் ஒரு பகுதி தற்போது வலயக் கல்வி அலுவலகங்களினால் வழங்கப்பட்டுவருகின்றன.

1999ஆம் ஆண்டு முதல் வழங்கப்படவேண்டிய சம்பள நிலுவைப் பணம் திறைசேரியில் போதிய நிதி இன்மையால் வழங்கப்படாதிருந்தது.

அண்மையில் பாடசாலை ஆசிரியர்கள், அதிபர்கள் நிலுவைச் சம்பளம் வழங்கப்படவேண்டும் எனக் கேட்டு ஒருநாள் சுகவீன லீவுப் போராட்டத்தை மேற்கொண்டதைத் தொடர்ந்து, நிலுவைப் பணத்தில் குறிப்பிட்ட வீதத்தை வழங்க கல்வி அமைச்சு சம்மதம் தெரிவித்தது.

இச்சம்பள நிலுவை தொடர்பாக வலிகாமம் கல்வி வலய ஆசிரியர்களுக்கு வழங்கவென 12 மில்லியன் ரூபா அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

அதிபர்கள், ஆசிரியர்கள், வலிகாமம் கல்வி வலயத்துடன் இணைக்கப்பட்ட அதிபர், ஆசிரியர்கள் 788 பேருக்கான நிலுவைப் பணத்தின் ஒரு பகுதி தற்போது வலிகாமம் கல்வி வலயத்தால் விநியோகிக்கப்பட்டு வருகின்றது.

சண்டிலிப்பாய் கோட்டத்தில் 242 பேருக்கும், உடுவில் கோட்டத்தில் 203பேருக்கும், தெல்லிப்பழை கோட்டத்தில் 180 பேருக்கும் சங்கானைக் கோட்டத்தில் 145 பேருக்கும், வலயத்துடன் இணைக்கப்பட்ட அதிபர், ஆசிரியர்கள் 18 பேருக்கும் சம்பள நிலுவைப் பணம் வழங்கப்படுகின்றன.

(ஒ-152)

# ஈரானிய நிலநடுக்கம்: மீட்பு பணிகள் தீவிரம்!

தெஹ்ரான்,ஜூன்24

ஈரானில் நேற்றுமுன்தினம் ஏற்பட்ட நிலநடுக்கத்தில் சிக்கி உயிரிழந்தவர்களின் சடலங்கள் மற்றும் இடிபாடுகளுக்கிடையில் இன்னும் உயிருடன் இருப்பவர்கள் ஆகியோரைத் தேடும்பணியில் மீட்புப் பணியாளர்கள் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.

இந்த நிலநடுக்கத்தில் 500இற்கும் மேற்பட்டவர்கள் பலியாகினர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. அவர்களில் 230பேரின் சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன.

சுமார் 25ஆயிரம் பொதுமக்கள் இந்த நிலநடுக்கத்தால் தமது வீடுகளை இழந்துள்ளனர் என்று ஈரானிய செஞ்சிலுவைச் சங்கம் அறிவித்துள்ளது.

நிலநடுக்கத்தால் பாதிக்கப்பட்ட ஈரானிய மக்களுக்காக உதவிப் பொருள்களை அனுப்பிவைக்கப் போவதாக அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் டபிள்யூ. புஷ் அறிவித்துள்ளார். சில மாதங்களுக்கு முன்னர் தான் உலகை அச்சுறுத்தும் நாடுகள் வரிசையில் ஈரானுக்கு முக்கியமான இடமுண்டு என்று புஷ் தெரிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

ஈரானிய பிரதமர் மொஹமட் கதாமி இந்தத் துயரச் சம்பவத்தை அடுத்து அந்த மாகாணத்தில் மூன்று நாள்களைத் துக்கதினமாகப் பிரகடனப் படுத்தியுள்ளார்.


மீட்புப் பணிகள் தொடர்ந்தும் இடம்பெற்று வருகின்றன. நிலநடுக்கம் பாதித்த பகுதிகளில் இருந்தவை எல்லாம் ஒருதள வீடுகள் என்பதனால் பெரும் இடிபாடுகள் எவையும் ஏற்படவில்லை என்றும், அவற்றில் சிக்கிக் கொண்டுள்ளவர்கள் இன்னும் உயிருடன் இருப்பதற்கான சாத்தியங்கள் இருப்பதாகவும் மீட்புப் பணியில் ஈடுபட்டுள்ள அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (ம)



பூகம்பத்தால் இடிந்துவீழுந்த கட்டடங்களின் இடிபாடுகளுக்கிடையே சிக்கியவர்களை மீட்கும்பணி நடக்கிறது.



இடிபாடுகளுக்குள் சிக்கி உயிரிழந்த ஒருவரின் சடலத்தை மீட்புப் பணியாளர்கள் தூக்கிவருகின்றனர்.



தகர்ந்த தனது வீட்டை சோகத்துடன் பார்க்கும் ஈரானியர் ஒருவர்.



பூகம்பத்திற்குப் பலியான தனது குடும்ப உறுப்பினரின் சடலத்தின் அருகே அமர்ந்து கதறியழும் ஒருவர்.

# குடியேற்ற விதிகளை கடுமையாக்க ஐரோப்பிய நாடுகள் இணக்கம்

செவிலே,ஜூன்24

சட்டவிரோதக் குடியேறிகளுக்கு எதிராக மிகக் கடுமையான சட்டங்களை நடைமுறைப்படுத்துவதில் ஐரோப்பிய நாடுகள் இணக்கம் கண்டுள்ளன.

ஸ்பானிய நகரான செவிலேயில் இடம்பெற்ற ஐரோப்பிய ஒன்றிய மாநாட்டில் இந்த இணக்க உடன்பாடு ஏற்படுத்தப்பட்டது. மாநாட்டில் கலந்துகொண்ட 15 நாடுகளின் தலைவர்கள் தமது நாடுகளுக்குள் அகதி அந்தஸ்து கோரி சட்ட விரோதமாக நுழைபவர்களுக்கு தஞ்சமளிப்பதற்கான விதிகளை மிகக் கடுமையாக்க ஒப்புக்கொண்டனர். ஆயினும் அகதிகளின் தாய்நாடுகள் தமது நடவடிக்கைகளுக்கு ஒத்துழைக்காவிட்டால் அவற்றின் மீது பொருளாதாரத் தடைகளை விதிக்கும் யோசனையை மாநாட்டில் கலந்துகொணட பல தலைவர்களும் நிராகரித்து விட்டனர்.

தமது மக்கள் அகதிகளாக வெளியேறுவதைக் தடுக்கவும் -

சட்டவிரோதக் குடியேறிகளை ஐரோப்பிய நாடுகளுக்குள் கடத்துபவர்களைக் கைதுசெய்யவும் -

அகதிகளாகப் புலம்பெயர்ந்தவர்களை மீண்டும் ஏற்கவும் -

ஐரோப்பிய நாடுகளுடன் ஒத்துழைக்கும் பின்தங்கிய நாடுகளுக்கு பொருளாதார உதவிகளை வழங்கும் யோசனைக்கு மாநாட்டில் ஆதரவு காணப்பட்டதாகக் கூறப்படுகிறது.

பொதுக்குடியேற்ற விதிகள், எல்லைகளில் ஒருங்கிணைந்த கண்காணிப்பு, அகதிகள் தொடர்பான பொது நடைமுறை ஒன்றை உருவாக்குவதற்கான காலவரம்பு, வறிய நாடுகளில் இருந்து அகதிகள் வெளியேறாமல் தடுக்க அந்நாடுகளுக்கு உதவுவது போன்ற விடயங்களில் ஐரோப்பிய நாடுகளின் தலைவர்கள் இணக்கம் கண்டதாகத் தெரிவிக்கப் பட்டது. (ஒ)

## பின்லேடன் விரைவில் தொலைக்காட்சியில் உரையாற்றுவார்?

அமெரிக்கா தேடிவரும் இஸ்லாமியத் தீவிரவாதியான ஒஸாமா பின்லேடன் விரைவில் தொலைக்காட்சி மூலம் உலக மக்களுக்கு உரையாற்றவுள்ளதாக அல்கெய்டா அமைப்பின் பேச்சாளர் சுலைமான் அபு கயாத் தெரிவித்தார். "அல் ஜெஸீரா" தொலைக்காட்சியில் ஒளிபரப்பப்பட்ட சுலைமானின் உரையிலேயே இந்த விவரம் குறிப்பிடப்பட்டது.

சுலைமான் மேலும் கூறுகையில், '98 வீதமான அல்கெய்டாவினரும், தலைவர்களும் கடவுள் அருளால் காயம் ஏதுமின்றிப் பாதுகாப்பாக ஆப்கானில் இருந்து வெளியேறித் தற்போது முழுப்பலத்துடன் ஒன்றுசேர்ந்துள்ளனர்.' அவர்கள் தூதரகங்கள் உட்பட அமெரிக்க நிலைகள் மீது எவரும் எதிர்பார்க்காத விதத்தில் தாக்குதல்களை நடத்தத் திட்டமிட்டுவருகின்றனர்.

இது தொடர்பாக ஒஸாமா பின்லேடன் விரைவில் தொலைக்காட்சியில் தோன்றி உரைநிகழ்த்துவார் என்று அவர் தெரிவித்தார். (ஒ)

# ஸ்பெயினின் 3 இடங்களில் கார்க்குண்டுகள் வெடித்தன!

மார்ரிட்,ஜூன்24

ஸ்பெயினில் 3இடங்களில் கார்க் குண்டுவெடிப்புகள் இடம்பெற்றுள்ளன. அங்கு நடந்த ஐரோப்பிய ஒன்றிய நாடுகளின் மாநாட்டைச் சீர்குலைக்கும் நோக்கிலேயே இந்தக் குண்டு வெடிப்புகள் நடத்தப்பட்டதாக ஸ்பானியப் பொலீஸார் சந்தேகிக்கின்றனர்.

வடக்கு ஸ்பெயினில் உள்ள பாஸ்குயி மாகாணத்தில் தனிநாடு கோரிப் போராடிவரும் தீவிரவாதிகள் இக்குண்டு வெடிப்புக்களை நடத்தியிருக்கலாம் என்றும் பொலீஸார் கூறினர்.

இந்த அமைப்பை ஐரோப்பிய ஒன்றியம் பயங்கரவாத அமைப்பாக அறிவித்ததற்கு பதிலடியாகக் குண்டு வெடிப்புகள் நிகழ்த்தப்பட்டிருக்கலாம் என்றும் கருதப்படுகிறது.

ஸ்பெயினின் செவில்லி நகரில் கடந்த வெள்ளி மற்றும் சனிக்கிழமைகளில் ஐரோப்பிய ஒன்றிய மாநாடு நடைபெற்றது குறிப்பிடத்தக்கது. (ஒ)

# கட்டாயத் திருமணத்தால் 12வயது சிறுமி உயிரிழப்பு!

டகார்,ஜூன்24

ஆபிரிக்க நாடான செனகலில் தனது மைத்துனருக்கு வலுக்கட்டாயமாகத் திருமணம் செய்துவைக்கப்பட்ட 12வயதுச் சிறுமி கொடூரமான வல்லுறவின் காரணமாக ஏற்பட்ட பலத்த இரத்தப் பெருக்கால் திருமணம் நடந்த 5ஆவது நாளில் உயிரிழந்துள்ளார்.

சிறுவர்களின் உரிமைகள் தொடர்பாக ஆராய்ந்துவரும் மனித உரிமைகள் அமைப்பொன்றே இத் தகவலை வெளியிட்டுள்ளது.

சிந்தியாவுபமம்பே என்ற கிராமத்தைச் சேர்ந்த டியெனபா ஹமடிசோ என்ற சிறுமியே உயிரிழந்தவராவார். இந்தச் சிறுமியின் தந்தை பிரான்ஸில் பணியாற்றுகின்றார். இதனால் இந்தச் சிறுமியும் அவள் தாயும் மாமன்களின் பாதுகாப்பில் இருந்து வந்தனர்.

இந்த நிலையில் சிறுமியின் தந்தைக்கும் தெரிவிக்காமல் அவளது தாயாரின் எதிர்ப்பையும் மீறி மாமன்கள் அந்தச் சிறுமியை தமது நண்பர் ஒருவருக்கு நிர்ப்பந்தமாக மணம் முடித்து வைத்தனர்.

இந்தத் திருமணம் கடந்த மே 31 ஆம் திகதி நடந்தது. திருமணத்தின் பின்னர் கணவனால் கட்டாய உறவுக்குட்படுத்தப்பட்ட இந்தச் சிறுமி இரத்தப்பெருக்கு ஏற்பட்டு பக்கவாத நோயினால் பாதிக்கப்பட்டார். உடனடியாக அவரை மருத்துவமனைக்கு எடுத்துச்செல்ல அறிவுறுத்தப்பட்ட போதும் அது உதாசீனப்படுத்தப்பட்டது.

இதனையடுத்தே அந்தச் சிறுமி உயிரிழந்துள்ளார். இந்தச் சம்பவத்தின் பின்னர் சிறுமியை மணம் முடித்த நபர் தலைமறைவாகிவிட்டார்.

ஆபிரிக்க நாடுகளில் சிறுவர்களின் உரிமைகள் எவ்வளவு மோசமாக மறுக்கப்படுகின்றன என்பதற்கு இந்தச் சம்பவம் ஓர் உதாரணம் என்று மனித உரிமைகள் அமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது. (ஒ)

உலக அரங்கில்

## ஜப்பானில் ஏ.ரி.எம். மெஷின் வெடித்து 4 பேர் காயம்!

டோக்கியோ,ஜூன்24

ஜப்பானில் ஏ.ரி.எம். இயந்திரம் (வங்கிகளில் உடனடியாக பணமாற்றுச் செய்யும் இயந்திரம்) திடீரென வெடித்ததில் 4 பேர் காயம் அடைந்தனர்.

ஜப்பானில் ஒஸாகா நகரில் உள்ள அஸாகி வங்கியில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

வங்கி வாசலில் நின்றிருந்த இருவர் இந்தச் சம்பவத்தில் படுகாயமடைந்தனர். தெரு வாசலில் நடந்து சென்ற மற்றும் இருவர் இலேசான காயங்களுக்கு உள்ளாகினர்.

ஏ.டி.எம் மெஷின் வெடித்தமைக்கான காரணம் பற்றி டோக்கியோ பொலீஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-9)

# உலகின் மூத்த பிரஜை சீனாவில் வாழும் பெண்

பீஜிங்,ஜூன்24

சீனாவில் வாழ்ந்து வரும் 'பின்னுவா' (வயது-116) என்ற பெண்மணியே உலகிலேயே வயதில் மூத்தவர் என கின்னஸ் உலக சாதனைப் புத்தக நிறுவனம் அறிவித்துள்ளது.

'பின்னுவா' 1886ஆம் ஆண்டு ஏப்ரல் 22ஆம் திகதி சீனாவில் சிச்சுவான் மாகாணத்தில் உள்ள லேஷான் என்ற கிராமத்தில் பிறந்தார்.

இவர் தனது 'நீண்ட நாள்' இரகசியம் பற்றிக் கூறுகையில், "நான் மாட்டு இறைச்சியை சாப்பிட்டதே இல்லை. அத்துடன் மதுபானம் அருந்தியதோ, புகைப்பிடித்ததோ கிடையாது. பழங்களையும் காய்களையுமே விரும்பி உண்கிறேன்" என்று கூறுகிறார்.

இதுவரை அதிக வயதானவராக கின்னஸ் புத்தகம் அறிவித்திருந்த அமெரிக்கக்காரர் கடந்த மார்ச் மாதம் 115 ஆவது வயதில் மரணம் அடைந்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ம-9)

# ஆணைப்போல் பெண்ணுக்கும் சம ஊதியம் வழங்கவேண்டும்

## லண்டன் நீதிமன்றம் தீர்ப்பு

லண்டன்,ஜூன்24

ஆணுக்கும், பெண்ணுக்கும் சம ஊதியம் வழங்கப்பட வேண்டும் என லண்டன் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

லண்டனைச் சேர்ந்த பெண் ஒருவர், ஒரே வேலைக்கு ஆணைவிட பெண்ணுக்கு குறைந்த சம்பளம் வழங்கப்படுவதை எதிர்த்து நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்தார். இதனையடுத்தே லண்டன் நீதிமன்றம் இந்த தீர்ப்பை வழங்கியுள்ளது.

லண்டனில் உள்ள 'ஷ்டோர் செக்ரிட்டிஸ்' என்ற நிறுவனத்தில் பணி புரிந்து வந்த 35 வயதான ஜிலிபோவர் என்ற பெண்ணுக்கு 17 லட்சம் ரூபாய் மட்டுமே சம்பளமாக வழங்கப்பட்டது. ஆனால், அதேவேலையைச் செய்த ஆண்களுக்கு அங்கு பல லட்சக் கணக்கில் சம்பளம் வழங்கப்பட்டது.

இதனை எதிர்த்து ஜூலி லண்டன் நீதிமன்றத்தில் வழக்குத்தொடுத்தார். அத்துடன் தனது வேலையையும் ராஜினாமாச் செய்தார்.

'இப்பெண் பாரபட்சமாக நடத்தப்பட்டுள்ளது உண்மையே! ஆண்களைவிட இப்பெண்ணுக்கு 18சதவீதம் குறைவான சம்பளத்தையே இந் நிறுவனம் வழங்கியுள்ளது' என லண்டன் சமவாய்ப்புக்கான ஆணைக் குழுவும் இவர் சார்பாக நீதிமன்றில் வாதாடியது.

அதனையடுத்து, ஜூலிக்கு 9 கோடி ரூபாய்கள் நஷ்டஈடாக வழங்க வேண்டுமென லண்டன் நீதிமன்று உத்தரவிட்டுள்ளது. (9)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



உயர்திரு.

**குழந்தைவேலு கணேசலிங்கம்**

*(B.A., Dip.In Edu., S.L.P.S.G.I)*

அவர்கள் முதல் நியமனம் பெற்று எமது பாடசாலைக்கு வந்து நாம் வளர வழிகாட்டிய நல்லாசானாவார். அவர் நல்லதிபராய் உயர்ந்து அகவை அறுபதைப் பூர்த்திசெய்து ஓய்வுபெறும் இந்த வேளையில் அவரது ஓய்வுக்காலம் சிறப்புற அமையவேண்டுமென்று வாழ்த்துகின்றோம்.

*யா/வரணி மகா வித்தியாலயம்.* (5163) - **பழைய மாணவர்கள்.**



**கணனிகள், கணனி உதிரிப்பாகங்கள்**
**என்பனவற்றை உத்தரவாதத்துடன்**
**நியாயமான விலையில் பெற்றுக்கொள்ள**
**யாழ்நகரில் நீங்கள் நாடவேண்டிய ஒரே ஒரு ஸ்தாபனம்**

# அல்டி எலக்ரோனிக்ஸ்

**COMPUTER'S**

| | |
|---|---|
| Intel pentium IV | (I.7, 1.6, 1.5 GHZ) |
| Intel Pentium III | (1000, 933, 866 MHZ) |
| Intel Pentium | (233 MHZ) |
| Cyrix | (333 MHZ) |

**COMPUTER ACCESSORIES**

Monitor Processor Motherboard
Scanner Printer AT/ATX Casing
Hard Disk CD/DVD Ram, Keyboard
Ram/Rimm Sound Card Video Card
Modem Floppy Drive CD writer
Net Work Card Mouse Speaker with woofer
U.P.S. T.V. Tuner Card Capture Card
Data Switch Ink Cartridge Floppy Disk, Software CD'S

**மேலதிக சகல கணனித் தேவைகளுக்கும்:**

**ALDI ELECTRONICS,**
**15, Stanley Road,**
**Jaffna.**

T.P.No.2676

(C/22678) Email: aldi electronics @ hotmail.Com



# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும் ஆத்மசாந்திப் பிரார்த்தனை அழைப்பும்

| மண்மகிழ | | கண்நெகிழ |
|---|---|---|
| 06 | | 25 |
| - | | - |
| 02 |  | 05 |
| - | | - |
| 1916 | | 2002 |

## திருமதி நாகலிங்கம் நாகம்மா

**எம்மைத் தவிக்க விட்டுச் சென்ற தாயே!**
**நேற்றுவரை பக்கத்திலிருந்த உங்களை**
**இன்றோடு இதயத்திலிருத்திவிட்டு**
**இருளில் தத்தளிக்கின்றோம் - உங்கள் நினைவுகள்**
**என்றும் எங்கள் நெஞ்சங்களில் நிழலாடும்!**

***ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!***

எங்கள் அன்புத் தாயின் மறைவுச் செய்திகேட்டு நேரில் வந்து அஞ்சலி செலுத்தியோருக்கும், அனுதாபச்செய்திகளை அனுப்பியோருக்கும் எமது நெஞ்சம் நெகிழ்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இன்று (24.06.2002) திங்கட்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதியபோசனத்திலும் பங்கு கொள்ளுமாறு எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*47, சபாபதி வீதி,*
*கொக்குவில்.* (5169)

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள். (4779)


## மின் ஆளியில் திருத்த வேலை

யாழ்ப்பாணம்,ஜூன்24

இலங்கை மின்சார சபையின் சுன்னாகம் நிலையத்தில் பிரதான மின் ஆளி ஒன்று நேற்றுமுன்தினம் முதல் செயலிழந்துள்ளதால் தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் மின் விநியோக சுழற்சியிலும் சீரின்மை ஏற்படக்கூடிய ஏதுநிலை உருவாகியிருப்பதாக மின்சாரசபை வட்டாரங்கள் தெரிவித்தன.

ஓரிரு தினங்களில் இந்த ஆளி திருத்தப்பட்டு மின் விநியோகம் வழமைக்கு கொண்டுவரப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

(ஐ-ரி)

## தெல்லிப்பழை மகாஜனா நிறுவுநர் தினம் இன்று

வலி.வடக்கு,ஜூன்24

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி நிறுவுநர் தினமும் பாடசாலை பரிசளிப்பு விழாவும் இன்று திங்கட்கிழமை காலை 9.00 மணிக்கு கல்லூரி அதிபர் பொ.சுந்தரலிங்கம் தலைமையில் கல்லூரி மண்டபத்தில் இடம்பெறவுள்ளன.

பிரதம விருந்தினராக இளைப்பாறிய பிரதித் தொழில் ஆணையாளர் சி.சிவபாஸ்கரனும் சிறப்பு விருந்தினராக தெல்லிப்பழைக் கோட்ட உதவிக் கல்விப்பணிப்பாளர் சந்திரபாலனும் கௌரவ விருந்தினராக சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியும் கலந்துகொள்ளவுள்ளனர்.

நினைவுப் பேருரையை வலிகாமம கல்விவலய உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி கோகிலா மகேந்திரன் ஆற்றவுள்ளார்.

பரிசில்களை திருமதி சுமித்திரா சிவபாஸ்கரன் வழங்கிக் கௌரவிக்கவுள்ளார்.

(ஐ-9-86)

## விளையாட்டு நிகழ்வுகள்

வலி.வடக்கு,ஜூன்24

யாழ்.மாவட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையில் நடைபெற்று வரும் 19 வயதுப் பிரிவிற்கான கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் இன்று திங்கட்கிழமை காலை 9.00 மணிக்கு கந்தரோடை ஸ்கந்தவரோதயக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட்டத்தில் ஸ்கந்தவரோதயக் கல்லூரியும் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியும் மோதவுள்ளன.

(ஐ-86)

* * *

வலி.வடக்கு,ஜூன்24

இலங்கை வங்கி மற்றும் வர்த்தக வங்கி ஆகியவற்றின் அனுசரணையுடன் யாழ்.மாவட்ட தாச்சிச் சங்கத்தினால் நடத்தப்பட்டு வரும் தாச்சிச் சுற்றுப் போட்டியில் இன்று திங்கட்கிழமை பிற்பகல் 4.30 மணிக்கு கோண்டாவில் மறுமலர்ச்சி விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட்டத்தில் சண்டிலிப்பாய் வசந்த ஸ்ரீ வி.கழகமும் நவாலி தென்றல் வி.கழகமும் பங்குபற்றுகின்றன.

(ஐ-9-86)


**ஈசன்**
**கல்வி நிலையம்.**
**A/L 2004**
**பிரிவு II**
**கணக்கீடு**
திரு.பாலவாசன்
B.B.A.(F.M.Spl)
Tue.,Thu.:-6.30-7.30 (ப.நே.)
**ஆரம்பம்:-25.06.2002**
(Tue.) 6.30a.m. (5151)



**இறைச்சிக்கோழி விற்பனைக்கு**

**புறொயிலர் இறைச்சிக் கோழி 1/4 கிலோவில் இருந்து வேண்டிய நிறைகளில் எந்நேரமும் பெற்றுக் கொள்ளலாம்.**

**61, சேர்பொன்.இராமநாதன் வீதி,**
**(மிலேனியம் பாருக்கு முன்பாக)**
**யாழ்ப்பாணம்.**
(5173)



**நிறைஞ்சனாஸ்**
சங்கானை
ஸ்ரீகாந்த், பூமிகா, ரகுவரன், விவேக் நடித்த
**ரோஜாக்கூட்டம்**
(நீள்ஸ்)
தினசரி: 11.00, 2.30, 5.30 (புதியநேரம்) (C-22539)


# மரண அறிவித்தல்கள்

### திருமதி
## லூக்காஸ் மரியாம்பிள்ளை பரமேஸ்வரி

இல.61,பழைய பூங்கா வீதி, கொய்யாத்தோட்டத்தை வசிப்பிடமாகக் கொண்ட திருமதி லூக்காஸ் மரியாம்பிள்ளை பரமேஸ்வரி நேற்று (23.06.2002) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் அமரர் லூக்காஸ் மரியாம்பிள்ளையின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற சின்னத்துரை - யோகம்மா ஆகியோரின் பாசமிகு மகளும் தனேஸ்வரி, குனேஸ்வரி, தங்கேஸ்வரி, செல்வராசா (சுவிஸ்), செல்வரட்டிணம் (சுவிஸ்), அன்ரன்கெனடி, அன்ரன்லூக்ஸ், அன்ரன்றேமன், அன்ரன்லோங் (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு தாயாரும் காலஞ்சென்ற பத்மநாதன், பத்மாவதி, பாலசிங்கம் (றஜீவ் ஸ்ருடியோ), இரட்ணசிங்கம் (ஜேர்மனி) ஆகியோரின் சகோதரியும் காலஞ்சென்றவர்களான அந்தோனிப பிள்ளை, அன்னம்மா ஆகியோரின் மைத்துனியும் தேவராசா, ஹரிதாஸ், சாரதாதேவி, இந்திராணி, மீரா ஆகியோரின் மாமியாரும் தேவலோஜினி, அஜந்தா, ஜெயமதி, தர்மினி, கிருஹாந்தன், ரஜீவன், துஷானி, பொபீந்திரன், கவிதா, சுமித்திரா, கௌசி, கௌசலா, கௌதமி, கௌதமன், பிரவீனா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.06.2002) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் இடம்பெற்றுப் பூதவுடல் முற்பகல் 11.00 (பு.நே) மணியளவில் தகனக்கிரியைக்காக கோம்பையன்மணல் இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*61,பழைய பூங்கா வீதி,*
*கொய்யாத்தோட்டம்.* (5161)

தகவல்:
சி.பாலசிங்கம் (தம்பி)
(றஜீவ் ஸ்ருடியோ)

## மார்க்கண்டு கருணாநிதி (கருணா)

மீசாலை மேற்கு, வாகையடியைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் தற்போது சுவிஸில் வசித்தவருமான மார்க்கண்டு கருணாநிதி அவர்கள் 22.06.2002 சனிக்கிழமை சுவிஸில் அகாலமரணமானார்.

அன்னார் மார்க்கண்டு - மகேஸ்வரி தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வனும் சிவோநிதியின் அன்புக் கணவரும் நடராசா - இலட்சுமிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற வசந்தரஞ்சினி மற்றும் வளர்மதி, மகேந்திரம் ஆகியோரின் சகோதரனும் தெய்வேந்திரம், ரஞ்சி, சிவப்பிரகாசம் (சுவிஸ்), மாலினி, சிவகுமார் (டென்மார்க்) ஆகியோரின் மைத்துனரும் கௌரீஸ்வரி, மதுரா, சத்தீஸ்வரன் ஆகியோரின் சகலனுமாவார்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*வங்களா வீதி,*
*மீசாலை மேற்கு,*
*மீசாலை.* (5162)

தகவல்:
ந.இலட்சுமிப்பிள்ளை
(மாமி)

### திருமதி
## செல்லம்மா தாமோதரம்பிள்ளை (பளை)

பெரியபளை, பளையைப் பிறப்பிடமாகவும், 3 ஆம்கட்டை, கட்டப்பிராய், கல்வியங்காட்டை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செல்லம்மா தாமோதரம்பிள்ளை அவர்கள் நேற்று (23-06-2002) ஞாயிறு அதிகாலை 5.00 மணிக்குக் காலமானார்.

இவர் காலஞ்சென்ற இராமு தாமோதரம்பிள்ளை (முன்னாள் மருந்தாளர் - பளை அரசினர் வைத்தியசாலை) அவர்களின் அன்பு மனைவியும் சுவாமிநாதன் (நிர்வாக உத்தியோகத்தர், பிரதேச செயலகம் - பளை), நாகரத்தினம் (பிரதி அதிபர், யாழ்.மத்தியகல்லூரி), தர்மகுலசிங்கம் (பதிவேட்டுப் பொறுப்பாளர் - யாழ்.போதனா வைத்தியசாலை), அமரர் தனபாலசிங்கம் (முன்னாள் கிராம அலுவலர், கோப்பாய் பிரதேச செயலகம்), தர்மராஜசிங்கம் (ஜேர்மனி), அருமைநாதன் (ஆயுர்வேத மருந்துக் கலவையாளர், பச்சிலைப்பள்ளி பிரதேச சபை, பளை), அரியமலர் திருச்செல்வநாதன், சிவநாதன் (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும் தவபாக்கியம், செல்வநாயகி அன்னமுத்து (நூலகர், பச்சிலைப்பள்ளி பிரதேச சபை, பளை), இந்திராணி, கோமதி, சந்திராதேவி (பளை மத்திய கல்லூரி), பாலசுப்பிரமணியம் (பச்சிலைப்பள்ளி பிரதேச சபை, பளை), உமா, சர்வேஸ்வரி, (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமியாரும் ரவீந்திரன், புவீந்திரன், கவிதா, சுகிதா, விஜிதா, கோபிகா, சுபோதினி, சசிந்தினி, நிர்த்திகா, தர்மராஜினி, தர்மராஜ், தர்மரஜீவ், கஜன், கஜனா, கஜீபன், கவீந்திரன், கஜாஜெனி, அஜிதன், அர்ச்சிகா, செந்தூரன், பிருந்தாபன், சாயிசன், காயத்திரி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் தனுசாவின் அன்புப் பூட்டியுமாவார்.

அன்னாரது பூதவுடல் நேற்று (23-06-2002) ஞாயிறு பி.ப. 3.00 மணிக்கு செம்மணி மயானத்தில் தகனஞ்செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*3 ஆம் கட்டை,*
*கட்டப்பிராய்,*
*கல்வியங்காடு.* (5167)

தகவல்:
குடும்பத்தினர்.

## சின்னக்குட்டி வைத்திலிங்கம்

மீசாலை மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னக்குட்டி வைத்திலிங்கம் அவர்கள் நேற்று (23.06.2002) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

இவர் சிவககொழுந்துவின் பாசமிகு கணவரும் பவானந்தன் (சுவிஸ்), கண்ணதாசன், விவேகானந்தர் (பிரான்ஸ்), விஜியா (லண்டன்), ராணி (மீசாலை) ஆகியோரின் அன்புத் தந்தையாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (23.06.2002) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் வேம்பிராய் மயானத்தில் தகனஞ்செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*மீசாலை மேற்கு,*
*மீசாலை.* (5166)

தகவல்:
குடும்பத்தினர்

## திருமதி இராசரத்தினம் தங்கம்பிள்ளை

தையிட்டியைப் பிறப்பிடமாகவும் உடுப்பிட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராசரத்தினம் தங்கம்பிள்ளை அவர்கள் 22.06.2002 சனிக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (25.06.2002) செவ்வாய்க்கிழமை காலை 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக கரும்பானி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*15ஆம் கட்டை, உடுப்பிட்டி.*
*(வாசிகசாலையடி)*

தகவல்:
மு.இராசரத்தினம்
(கணவர்)

# வேலணை, மூதூர் தாக்குதல்களை கண்டித்து கூட்டணி தீர்மானம்

கொழும்பு,ஜுன்24

வேலணைக் கிராமத்தில் கடந்த 20 ஆம் திகதி கடற்படையினராலும் அவர்களுடன் சேர்ந்து செயற்படுகின்ற தமிழ் ஆயுதக்குழு உறுப்பினர்களாலும் விடுதலைப் புலிகளின் முக்கிய அரசியல் தலைவர்கள் தாக்கப்பட்டு வாகனத்தில் கடத்திச் செல்லப்பட மேற்கொண்ட முயற்சி பொது மக்களின் தலையீட்டால் தடுத்து நிறுத்தப்பட்ட சம்பவம் தொடர்பாகவும் -

ஜுன் 21ஆம் திகதி இரவு மூதூர்க் கிராமத்தில் சமூகவிரோத சக்திகளால் விடுதலைப் புலிகளின் அரசியற் காரியாலயம்மீது மேற்கொள்ளப்பட்ட கோழைத்தனமான தாக்குதலையும் - நேற்றுக் கூடிய தமிழர் விடுதலைக் கூட்டணியின் மத்திய செயற்குழு கண்டித்துத் தீர்மானம் நிறைவேற்றியது.

அத்தீர்மானத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

மேற்கூறிய தாக்குதல் சம்பவங்கள் யுத்தநிறுத்த ஒப்பந்தத்தை மீறும் செயல் மட்டுமன்றி திட்டமிட்டு சமாதான முயற்சிகளைச் சீர்குலைக்கும் செயல்களாகும். விடுதலைப் புலிகளை ஆத்திரமூட்டி, எதிர்த்தாக்குதலை நடத்தத் தூண்டும் செயல்களாகவே இவற்றைக் கருதுகிறோம்.

தமிழர் விடுதலைக் கூட்டணி இத்தாக்குதல் சம்பவங்களை வன்மையாகக் கண்டிப்பதுடன் இது சம்பந்தமாக அரசு உடனடியாக பாரபட்சமற்ற விசாரணைகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் -

இத்தாக்குதலில் சம்பந்தப்பட்டோரைக் கைதுசெய்து சட்டத்தின் முன் நிறுத்தவேண்டும் என்றும் -

கேட்டுக்கொள்கின்றது.

இத்தாக்குதல் சம்பவம் தொடர்பாக விடுதலைப் புலிகள் கடைப்பிடித்த பொறுமையை த.வி.கூ. செயற்குழு பாராட்டுவதுடன் சமாதான முயற்சிகளைச் சீர்குலைக்கக்கூடிய இது போன்ற விசமத்தனமான பேர்வழிகளின் வலையில் விழாது தவிர்த்துக்கொள்ளுமாறும் விடுதலைப் புலிகளிடம் கேட்டுக்கொள்கின்றது - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.(ஐ-6)

# நயினை தேர் உற்சவம் பக்திபூர்வமாக நடந்தது

## ஒருலட்சம் பக்தர்கள் திரண்டனர்

யாழ்ப்பாணம்,ஜுன்24

வரலாற்றுப் பெருமைமிகு நயினாதீவு நாகபூஷணி அம்மன் ஆலயத் தேர் உற்சவம் நேற்றையதினம் வெகு சிறப்பாக நடைபெற்றது.

அதிகாலைமுதல் பூசைகள் ஆரம்பமாகி காலை 9.30 மணிக்கு தேர் உற்சவம் இடம்பெற்றது.

நேற்றைய தேர் உற்சவத்தில் நீண்டகாலத்திற்குப் பின்னர் சுமார் ஒருலட்சத்திற்கும் அதிகமான பக்தர்கள் கலந்துகொண்டுள்ளதாக மதிப்பிடப்படுகின்றது. தென்பகுதியிலிருந்தும் பெரும் எண்ணிக்கையான மக்கள் ஆலயவழிபாடுகளில் கலந்துகொண்டுள்ளனர்.

தேர் உற்சவத்தை முன்னிட்டு விசேட படகுச் சேவைகளும், பஸ் சேவைகளும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன.

மூன்று தேர்களையும் பின் தொடர்ந்து பெருந்தொகையான பக்தர்கள் அங்கப் பிரதட்சணையிலும், அடியளிப்பிலும் ஈடுபட்டிருந்தனர்.

வழமையை விடவும் இம்முறை திருவிழாக் காலக்கடைகள் மிகவும் களைகட்டியிருந்தன். தென்பகுதியிலிருந்து வருகைதந்த முஸ்லிம் வர்த்தகர்களும் வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தனர். பக்தர்களுக்குத் தாகசாந்தி ஏற்பாடுகளும் செய்யப்பட்டிருந்தன. 'அமுதசுரபி' அன்னதான சபையினர் அன்னதானப் பணிகளில் முழு வீச்சாக ஈடுபட்டிருந்தனர்.

(ஐ-9)

# யுவதியிடம் நகைகள் பறிப்பு!

சுன்னாகம்,ஜுன்24

மோட்டார் சைக்கிளில் வந்து முகவரியை விசாரித்த இரு இளைஞர்கள் யுவதியின் கழுத்திலிருந்த நகைகளை அபகரித்துச்சென்றனர்.

இச்சம்பவம் கடந்த வெள்ளிக்கிழமை உடுவிலில் இடம்பெற்றது.

மோட்டார் சைக்கிளில் வந்த இருவரும் பிரஸ்தாப பெண்ணிடம் முகவரியொன்றை விசாரித்ததாகவும் -

திடீரென அப்பெண்ணின் கன்னத்தில் அறைந்துவிட்டு கழுத்திலிருந்த தாலிக்கொடி மற்றும் சங்கிலியை அறுத்துக்கொண்டு தப்பியோடிவிட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அருகிலுள்ள ஆலயமொன்றில் நடைபெற்ற திருவிழாவில் ஒலிபெருக்கிச் சத்தம் கேட்டுக் கொண்டிருந்தமையால் பிரஸ்தாப யுவதியின் கூச்சல் ஏனையோருக்குக் கேட்காது போனதாகவும் கூறப்படுகிறது.

இதேபோன்றதொரு சம்பவம் சில தினங்களுக்கு முன்னர் ஆவரங்காலிலும் இடம்பெற்றது. (ஐ-27)

## அம்பாறை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

லீவில் சொந்த நாடான பின்லாந்திற்குச் சென்றுள்ளார். தற்போது பதில் கண்காணிப்புக் குழுத் தலைவராக நோர்வே நாட்டைச் சேர்ந்த ஸ்வையின் கடமையாற்றி வருகிறார்.

இதேவேளை, ஏற்கனவே உதவித தலைவராக கடமையாற்றி வந்த உலா கிறிஸ்டியன் ஹெக்ஜே இங்குள்ள சீதோஷ்ண நிலை ஒத்துவராததால் பதவியை விட்டுவிலகி சொந்த நாட்டிற்குச் சென்றுள்ளார்.

இவரது இடத்துக்கு டென்மார்க்கைச் சேர்ந்த கார்ல் நியமிக்கப்பட்டுள்ளார். இவர் அண்மையில் அக்கரைப்பற்றில் திறக்கப்பட்ட உப அலுவலகத்திற்குப் பொறுப்பாக இருந்து வருகிறார். (ஐ)

## தீவக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நியமித்து விசாரிக்க உயர்மட்டக் குழு ஒன்றை நியமிப்போம் - என்றும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை -

யுத்தநிறுத்த உடன்படிக்கை மீறப்படும் சந்தர்ப்பங்களில் துரிதமாக நடவடிக்கை எடுக்க வசதியாக கண்காணிப்புக் குழு அலுவலகம் ஒன்றை ஊர்காவற்றுறையில் திறக்கவுள்ளதாக இலங்கை வானொலி தெரிவித்தது.

(ஐ-6)

## ஜே.வி.பியின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தப் போராட்டத்தினை நடத்துவதற்கு ஐக்கிய சோஷலிசக் கட்சி ஏற்பாடு செய்துள்ளதாக கட்சியின் யாழ்.மாவட்டச் செயலாளர் க.தேவதாசன் தெரிவித்தார்.

இந்த மறியல் போராட்டத்தில் குடாநாட்டிலுள்ள அரசியல் கட்சிகள, தொழிற்சங்கங்கள், பொது அமைப்புகள் என்பவற்றின் பிரதிநிதிகளையும் [illegible] கலந்து கொள்ளும்மாறும அவா கேட்டுள்ளார்.

(ஐ-4-13)

## 4,000....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சமாதானக் குழுவினர் நேற்றுமுன்தினம் மாலை வவுனியாவை வந்தடைந்திருந்தனர்.

நேற்று நயினாதீவு நாகபூஷணி அம்மன் ஆலயத்தில் இடம்பெற்ற தேர்த் திருவிழா நிகழ்வுகளில் கலந்து கொண்டனர்.

தொடர்ந்து சமாதானக் குழுவினர் ஸ்ரீ நாக விகாரைக்குச் சென்றனர். அங்கு யாத்திரிகர்கள் தங்குவதற்கான விடுதிக்கு நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சித் அலுவிகார அடிக்கல்லை நட்டு வைத்தார். இந்த விடுதியை சுமார் ஒரு கோடி ரூபா செலவில் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

பின்னர் நல்லூர் கந்தசுவாமி ஆலயத்திற்கு வருகை தந்த சமாதானக் குழுவினர் அங்கு தாம் எடுத்து வந்த ஞானவேலை அன்பளிப்புச் செய்தனர். இந்த நிகழ்வில் இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன் கலந்து கொண்டார்.

இந்தியாவில் இருந்து எடுத்து வரப்பட்ட 19 அடி உயரமான - சுமார் இரண்டரை லட்சம் ரூபா பெறுமதி வாய்ந்த - வெண்கலத்திலான இந்த வேலை மாத்தளை மக்கள் தமது அன்பளிப்பாக வழங்கியிருந்தனர்.

(ஐ-9-ரி)

## தலைவராக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தேசியப்பட்டியல் எம்.பி.பதவிக்கு எவர் தெரிவு செய்யப்பட்டார் என்பதை மத்திய செயற்குழு அறிவிக்கவில்லை. அதுபற்றி கூட்டணியின் நியமனக்குழு அறிவிக்கும் என்று கூட்டணி வட்டாரங்கள் தெரிவித்தன.

நேற்றுக் காலை 10 மணிக்கு சிரேஷ்ட உபதலைவர் வ.ஆனந்தசங்கரி தலைமையில் ஆரம்பமான கூட்டம் மாலை வெகுநேரம் வரை தொடர்ந்து நடைபெற்றது. அமரர் சிவசிதம்பரத்தின் நியமனப்பட்டியல் எம்.பி.பதவிக்கு யாரை நியமிப்பது என்பதில்தான் சூடான விவாதங்கள் நடந்தன.

ஆனந்த சங்கரி ஆதரிக்கும் மானிப்பாய் முத்துலிங்கமா அல்லது சம்பந்தனும் சகாக்களும் விரும்பும் மூதூர் துரைரத்தினசிங்கமா? இவர்களில் எவரை நியமிப்பது என்பதில் சூடான வாக்குவாதம் வெகுநேரம் நடந்தது.

இந்தப் பதவிக்கு வேறு சில பேர்கள் வந்து போனாலும் அவை பாரதூரமாக எடுத்துக்கொள்ளப்படவில்லை. துரைரத்தினசிங்கத்தின் நியமனத்துக்கே கூட்டத்தில் ஆதரவு அதிகமாக இருந்தது. இந்த நியமனத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளின் விருப்பத்தை அனுசரித்து நடக்க வேண்டும் என்று கூட்டத்தில் சுட்டிக்காட்டப்பட்டதை அடுத்து துரைரத்தினசிங்கத்தின் நியமனத்துக்கு இருந்த ஆதரவு அதிகரித்தது. அதையடுத்தே மேற்கண்ட முடிவு மேற்கொள்ளப்பட்டது.

இதற்கிடையில் -

தேசியப் பட்டியல் எம்.பி.பதவிக்கு யாரை நியமிப்பது என்பது தொடர்பாக இன்று முடிவு எடுக்கப்படும் என்று புதிய தலைவராகத் தெரிவு செய்யப்பட்டிருக்கும் ஆனந்தசங்கரி நேற்றிரவு பி.பி.ஸி. தமிழோசைக்கு வழங்கிய பேட்டியில் தெரிவித்துள்ளார். இதனால் கூட்டணி வட்டாரங்களில் தொடர்ந்தும் குழப்பநிலை நீடிக்கிறது.

ஆனந்தசங்கரியுடன் பிரச்சினைப்பட்டுக் கொண்டிருக்கும் மாவைசேனாதிராஜா கூட்டத்தில் கலந்துகொள்ளவில்லை.

கூட்டம் நடைபெற்றவேளை அவர் கொழும்புக்கு வெளியே தங்கியிருந்ததாகக் கூறப்படுகிறது. ஆனந்தசங்கரியின் நியமனத்தால் அதிருப்தி அடைந்திருக்கும் மாவை சேனாதிராஜா கட்சியில் தனது எதிர்கால நிலைப்பாடு குறித்து விரைவில் அறிவிப்பார் என்று அவருடன் தொடர்புடைய வட்டாரங்கள் தெரிவித்தன. (ஐ)


**இந்துசமய விவகார அலுவல்கள் அமைச்சு**
**இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம்**
**நடத்தும்**

சிலப்பதிகார ஆய்வரங்கின் - 2002 இறுதிநாள் கலை நிகழ்வுகளில் இன்று மாலை 6.30மணிக்கு முல்லைத்தீவு நாட்டுக்கூத்துக் கலைஞர்கள் வழங்கும் 'கோவலன் நாட்டுக்கூத்து' யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெறும்.

**அனைவரையும் அன்புடன் அழைக்கின்றேன்.**

பணிப்பாளர்,
இந்து சமய கலாசார அலுவல்கள்
திணைக்களம்.

(C/22679)

**NIRU TUITION CENTRE**
Kondavil.

**A/L 2003**
**DAY CLASS**

CO.MA. - A.பத்மநாதன்
CHE. - N.மகேஸ்வரன்
PHY. - S.சோதிலிங்கம்
BIO. - N.தற்பரன்

வகுப்புகள்
நடைபெறுகின்றன.

(5164)

**வரணி மகா வித்தியாலய பழைய மாணவர் சங்க**
**வருடாந்தப் பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகசபைத் தெரிவும்**

காலம் : 07.07.2002 ஞாயிற்றுக்கிழமை
நேரம் : காலை 10.00 மணி
இடம் : வித்தியாலய பிரதான மண்டபம்

மேற்படி கூட்டத்தில் அனைத்துப் பழைய மாணவர்களையும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

குறிப்பு: எமது சங்கத்தால் மேற்கொள்ளப்பட்ட எமது வித்தியாலயத்தின் முற்பக்க மதில் அமைப்புப் பணிக்குப் பல வழிகளிலும் உதவிகள், ஆலோசனைகள் வழங்கிய அனைத்து உள்ளங்களுக்கும் நன்றியினைத் தெரிவிப்பதில் பெருமகிழ்ச்சியடைகின்றோம்.

எஸ்.எஸ்.உதயகுமார், தலைவர். க.முதலிக்குட்டி, பொருளாளர். மு.திவ்வியபாலன், செயலாளர்.

(4742)

**COOL LAMINATION - கவரிடுதல்**

நினைவுமலர் கவர், புத்தககவர், விழாமலர்கவர், புகைப்பட அல்பம் என்பன *Laminating* செய்து கொடுக்கப்படும்.

உ பிள்ளையார் அச்சகம், 676, பருத்தித்துறை வீதி, நல்லூர். ஆகக் குறைந்த கட்டணம் ரூபா 3/=

786

**R. B. Booking Centre**
**ஆர்.பி (B) பஸ் ஆசனப் பதிவகம்**

யாழ், கொழும்பு, மட்டக்களப்பு, திருமலை, கண்டி, பஸ் சேவைகள்

*Prop: V. Rajaratnam (Selvam)*

**சொகுசு பஸ் சேவை!**

*15, Grand Bazaar, Jaffna.*

பலவருட கால அனுபவமிக்க யாழ். - கொழும்பு, மற்றும் திருமலை, வவுனியா, மட்டக்களப்பு முதலிய தூர இடங்களுக்கான சொகுசு பஸ், வான் சேவைகளை நடத்திவரும் தனியார்துறை

**ஆர்.பி.(B) பஸ் ஆசனப் பதிவகத்தார்.**

தூர இடங்களிலிருந்து வரும் பயணிகளின் நன்மை கருதி இன்று (24-06-2002) திங்கட்கிழமை முதல் காலை 5.00 மணிதொடக்கம் 10.00 மணிவரை தமது சேவையை விசேட சேவையாக நீடித்துள்ளார்கள்.

தென்மராட்சி மக்களின் வசதிகருதி கிளை ஸ்தாபனமாக S.S. பஸ் ஆசனப் பதிவகத்தை ஆரம்பித்துள்ளார்கள்.

*உங்கள் ஆசனப் பதிவுகளை இங்கே மேற்கொள்ளுங்கள்*

கணேசா ஹாட்வெயர், 276, கண்டி வீதி, சாவகச்சேரி. (பழைய பிரதேச செயலகம் முன்பாக)

கோகிலா தேநீர்ச்சாலை, பஸ்நிலையம் முன்பாக, கொடிகாமம்.

ஸ்ரீ கண்ணகி பல்பொருள் வாணிபம், புத்தூர்ச்சந்தி, மீசாலை. (மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயத்திற்கு அருகில்)

தென்மராட்சியில் தொடர்பு:- S.செவ்வேள் - கு.ந.பாலச்சந்திரன் (பாலா மாஸ்ரர்), மீசாலை.

*உங்கள் திருப்தியே எங்கள் சேவை.* (C/22677)


## மரண அறிவித்தல்

### செல்லப்பா காத்தவராஜன் (கார்த்தி)

கொல்லன்கலட்டியைப் பிறப்பிடமாகவும், பிரான்ஸை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லப்பா காத்தவராஜன் 21-06-2002 வெள்ளிக்கிழமை பிரான்ஸில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லப்பா - மாமாங்கத்தின் அன்பு மகனும் இராதா (லண்டன்), ஜெயராணி, மல்லிகாதேவி, ஜெகநாதன் (இ.மி.ச.) பத்மநாதன் (சவூதி), இரவீந்திரநாதன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பிரான்ஸில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*தொம்பை வீதி,*
*உடுவில் கிழக்கு,*
*சுன்னாகம்.*

தகவல்:
செ.ஜெகநாதன்
(பாபு)

(5112)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 24.06.2002இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.